காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

சென்னை மாநகராட்சி துணைமேயர் திரு. டி. வெங்கடேசன்.

விலை 20 காசு

7-12-69

தஞ்சையில் டிராக்டர் உபயோகித்தால்

விவசாயத் தொழிலாளர்கள் பாதிக்கப்படுவார்களா?

கே. ரங்கராஜன்

தமிழ் நாட்டின் நெற்களஞ்சியமான தஞ்சாவூர் மாவட்டத்தில் சமீபத்தில் விவாதிக்கப்படுகிற முக்கிய விஷயம் விவசாய வேலைகளுக்கு டிராக்டர்களை உபயோகிப்பதால் விவசாயத் தொழிலாளர்கள் வேலை இல்லாமல் போவார்களா என்பது தான். நேர்மையாய் சிந்திக்கும் எவர்க்குமே ஒரு விஷயம் மனதில் படும். அதாவது எந்தத் துறையிலாயினும் யந்திரங்கள் உபயோகிக்கப்பட்டால் தொழிலாளர்கள் வேலை இல்லாமல்தான் போவார்கள். அது இயற்கைதான். இதேபோல் விவசாய வேலைகளுக்கு டிராக்டர்களை உபயோகித்தால் தொழிலாளர்களுக்கு விவசாய வேலை இல்லாமல் போகும் என்பதும் உண்மைதான். டிராக்டர்களை உபயோகிப்பதன் மூலம் ஆகிற சாகுபடிச் செலவு, தொழிலாளர்களை ஈடுபடுத்தி சாகுபடி செய்வதற்கு ஆகிற செலவை விடக் குறைவாகவே ஆகும். (முக்கியமாக உழவு வேலையில் இது உண்மை). ஆனால் தஞ்சாவூரில் கையாளப்படுகிற விவசாய நடைமுறைகளை நாம் ஆழ்ந்து பரிசீலித்தால் இந்தப் பிரச்சினை எழாது என்று தெரியவரும்.

தஞ்சாவூர் மாவட்டம் நல்ல வளமான பூமியை உடையது. சாகுபடிக்கேற்ற விஸ்தீர்ணம் 14·53 லட்சம் ஏக்கரா இருக்கிறது. மொத்த பயிர் விளைச்சல் பரப்பு சுமார் 18·77 லட்சம் ஏக்கரா. இந்த மாவட்டத்தில் விவசாயத் தொழிலாளர் எண்ணிக்கை (1961 குடிமதிப்புக் கணக்குப்படி) சுமார் 4·55 லட்சம். இதில் ஆண்கள் 2 48 லட்சம். பெண்கள் 1·97 லட்சம். எனவே இந்தத் தொழிலாளர்கள்தான் 4·94 லட்சம் குடும்பங்களுக்குச் சொந்தமான 14 53 லட்சம் ஏக்கரா பரப்புள்ள விஸ்தாரமான இடத்தில் விவசாய வேலைகளை நடத்த வேண்டியிருக்கிறது. இதன்படி பார்த்தால் தொழிலாளர் எண்ணிக்கை தேவையைப் பூர்த்தி செய்யப் போதாது. பாக்கித் தேவை உண்மையில் இன்னும் அதிகம். தமிழ் நாட்டில் விவசாயத் தொழிலாளர்கள் ஏராளமாய் கிடைக்கிறபோதிலும் தஞ்சை மாவட்டத்தில் அவர்கள் பற்றுக்குறைதான். எனவே தொன்றுதொட்டு அக்கம் பக்கத்து மாவட்டங்களிலிருந்து, ராமநாதபுரம் — திருச்சி ஆகியவைகளிலிருந்து அறுவடைக் காலத்தில் தொழிலாளர்கள் அழைத்து வரப்படுவார்கள். இது. குறுவை சாகுபடி விஸ்தீர்ணம் குறைவாக இருந்த போதுகூட நடந்து வந்தது.

விவசாயத்தில் முதல் வேலை உழுவதுதான். அது குறுவைப் பயிருக்காக ஜூலை மாதம் சுமார் 6 லட்சம் ஏக்கராவில் நடக்கும். பிறகு ஜூலை இறுதியில் சம்பாப் பயிருக்காக நாற்றங்கால் போடுவதற்கு சுமார் 0·9- லட்சம் ஏக்கராவில் உழவு வேலை நடக்கும். குறுவைக்காக 6 லட்சம் ஏக்கராவும் சம்பா நாற்றங்காலுக்கு 0 9 லட்சம் ஏக்கராவும் இங்கே கிடைக்கிற தொழிலாளர்களால் உழுதுவிட முடியாது. தஞ்சை மாவட்டத்தின் மேல் பகுதியில் திருச்சியிலிருந்து தொழிலாளர்கள் கொண்டுவரப் படுவார்கள். தெற்கு, கிழக்குப் பகுதிகளில் ராமநாதபுரத்திலிருந்து தொழிலாளர்கள் கொண்டு வரப்படுவார்கள். ஜூன், ஜூலை மாதங்களில் உழவு வேலையோடு கூட மரமடித்தல், வரப்புப் போடுதல், உரம் போடுதல், நாற்றங்கால் தயாரிப்பு முதலிய வேலைகளும் ஏககாலத்தில் நடக்கும். டிராக்டர் உழவு வேலை மாத்திரமேதான் செய்யும். இதனால் தொழிலாளர்களுக்கு வேலை இல்லாமல் போய்விடுமென்று கூறப்படுகிறது. முதலில் வேலைக்குக் கிடைக்கிற 4.4 லட்சம் தொழிலாளர்கள் 6.9 லட்சம் ஏக்கராவுக்கும் அதிகமான விஸ்தீர்ணத்தை உழுவதற்குப்பற்றமாட்டார்கள். ஒரு ஏக்கரா நிலம் உழுவதற்கு 12 - தொழிலாளர்கள் தேவைப்படும் என்று கணக்கிட்டால் இப்படி (சராசரி வேலை நேரம் 6 மணி என்று வைத்துக்கொண்டால் இந்தக் கணக்கு). மேலும் உழவு முடிந்த உடனே வரப்புக் கட்டுவது, மரமடிப்பது உரம் போடுவது முதலிய வேலைகள் செய்யப்பட வேண்டும். ஒரு டிராக்டர் தினசரி 8 முதல் 10 ஏக்கர் வரை உழும். அதாவது டிராக்டர் ஓட்டுபவர் 6—8 மணி நேரம் வேலை செய்வதாக வைத்துக் கொண்டால், தஞ்சை மாவட்டச்திலுள்ள டிராக்டர்களின் மொத்த எண்ணிக்கை சுமார் 625. இந்த 625 டிராக்டர்கள் கொஞ்சமும் போதா. அதுவும் தவிர, டிராக்டர் உழுதவுடன் பிந்திய வேலைகளை மனிதர்களே செய்யவேண்டும். இதிலிருந்து தெரிவது என்னவென்றால் டிராக்டர்கள் தொழிலாளர்களை வேலையிலிருந்து விரட்டிவிடாது என்பதுதான்.

இரண்டாவதாக நடைமுறைத் திட்டப்படி தாளடிப் பயிர் வேலை அக்டோபர் இறுதியிலும் நவம்பர் ஆரம்பத்திலும் துவங்கும் குறுவைப் பயிர் அறுவடை வடகிழக்குப் பருவக் காற்றுப் பருவத்தோடு ஒட்டினதாய் இருக்கும். குறுவைப் பயிர் முழுவதுமே — சுமார் 6 லட்சம் ஏக்கராவில் உள்ளது—மழை வருவதற்கு முன் அறுவடையாகிவிட வேண்டும். ஆகையால் தஞ்சாவூர் மாவட்டத்தில் அக்டோபர் நவம்பர் மாதங்களில் விவசாய வேலை மும்முரமாக இருக்கும். ஏராளமான தொழிலாளர்கள் இரண்டு வேலைகளுக்குமாகத் தேவைப்படுவார்கள். அதாவது 6 லட்சம் ஏக்கராவிலுள்ள குறுவைப் பயிரை அறுவடை செய்வதற்கும் அறுவடையான அந்த நிலத்தில் (சுமார் 5 லட்சம் ஏக்கரா) தாளடி நடவுக்காக உழவு வேலை செய்வதற்கும் தொழிலாளர் வேண்டும், எனவே குறிப்பிட்ட இந்தப் பருவத்தில் கூட டிராக்டருக்கு வயலில் முக்கிய வேலை இருக்கிறது. குறுவைப் பயிர் அறுவடை முழுவதையும் 6 லட்சம் ஏக்கராவில் நடத்தி முடிக்க தொழிலாளர் எண்ணிக்கை பற்றாது.

இந்த உச்ச வேலைக் கட்டத்தில் (அக்டோபர் நவம்பர்) ஒவ்வொரு தொழிலாளியும் குறுவை அறுவடை வேலையில் ஈடுபடவே விரும்புகிறார்கள். ஏனென்றால் அதற்கு நல்ல சம்பளம் தானியமாகக் கிடைக்கிறது. இந்த விசேஷ அம்சத்தையும் கவனிக்க வேண்டும். தஞ்சாவூர் மாவட்ட்த்தில் சாதாரணமாக அமுலிலுள்ள ஒப்பந்தக் கூலித்

(13-ம் பக்கம் பார்க்க)

காஞ்சி

நிறுவனர்: அண்ணாதுரை

ஆண்டு சந்தா ரூ. 10 ஆறுமாத சந்தா ரூ. 5

மலர் 6 | 7—12—69 | இதழ் 21

முகையூர் தொகுதி இடைத் தேர்தல்!

டிசம்பர் 16-ஆம் நாள்!

முகையூர் தொகுதியில் இடைத் தேர்தல்!

கழகம் ஆட்சிப் பொறுப்பேற்றதற்குப் பின்னால் நடைபெற்ற இடைத் தேர்தல்கள் அனைத்திலும் கழகம் நேரடியாகக் கலந்து கொண்ட தொகுதிகளெல்லாம் வெற்றியைப் பெற்றிருக்கிறது!

இரண்டரை ஆண்டு காலத்தில் பேரறிஞர் அண்ணா அவர்களின் தலைமையிலும் — கலைஞர் கருணாநிதி அவர்களின் தலைமையின் கீழும் தமிழக அரசு சாதித்திருக்கின்ற அரிய பல சாதனைகளுக்கு மக்களாதரவு தொடர்ந்து இருந்து வருகிறது என்பதனை மெய்ப்பித்திட நல்லதருணம் வாய்த்திருக்கிறது!

கடந்த பொதுத் தேர்தலில் இதே முகையூர்த் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்றவர் குணக்குன்று கோவிந்தசாமி அவர்கள்!

அவர் பேரறிஞர் அண்ணா—கலைஞர் கருணாநிதி ஆகியோரின் தலைமையின் கீழ், அமைந்த அமைச்சரவைகளில் இடம் பெற்று—சிறப்பான முறையில் செயல்பட்டு மக்களின் நெஞ்சத்திலெல்லாம் இடம் பெற்றார்.

உணவுப் பஞ்சம் தலை விரித்தாடிய நிலையில் ஆட்சிப் பொறுப்பினை கழகம் ஏற்றுக்கொண்ட நிலையில் விவசாயத்துறைக்கு அமைச்சராகி ஏ.கோவிந்தசாமி அவர்கள் பற்றாக்குறை யெனும் நிலைமையை அறவே மாற்றி—நாட்டில் பசுமைப் புரட்சி ஏற்படத் தக்க விதத்தில் திட்டமிட்டுச் செயலாற்றிய திறனை நாடு மறந்து விடவில்லை.

அப்படிப்பட்ட பண்பாளர் எதிர்பாராத விதத்தில் மறைவெய்தி விட்டார்கள் என்றாலும் அவரது முயற்சியால் உருப்பெற்ற பல திட்டங்கள் இன்று நாட்டில் வளமையைத் தோற்றுவித்திருக்கிறது.

தமிழக அரசு—வேளாண்மைத்துறையில் மட்டுமல்ல; நாட்டை முன்னேற்றுவிக்கும் எல்லாத் துறைகளிலும் தனிக்கவனம் செலுத்தி வளர்ச்சிக்கு வகை செய்திருக்கிறது. மக்களின் வாழ்வுக்கு வழி வகுத்திருக்கிறது.

அப்படிப்பட்ட மக்கள் நல அரசுக்கு உறுதுணை புரியும் வாய்ப்பை—ஊக்குவிக்கும் வாய்ப்பை உருவாக்கித் தருவதுதான் இந்த இடைத் தேர்தல்!

இரண்டரை ஆண்டு கால ஆட்சியின் மறக்க முடியாத சாதனைகள் கழகத்திற்கு பின்பலமாக இருக்கின்றன.

ஆனால் காங்கிரசுக்கோ எந்தவித பின்பலமுமில்லை—மாறாக பலவீனங்கள்தான் பெருகியிருக்கின்றன.

சாதனைச் சரித்திரம் படைத்திருக்கும் கழகத்திற்கும்—

வேதனை வரலாற்றையே படைத்து அழித்துவிட்ட காங்கிரசுக்கு மிடையே நடைபெறும் தேர்தல்—முகையூர் இடைத் தேர்தல்!

கழகத்தின் சார்பில், காங்கிரஸ் வேட்பாளரை எதிர்த்துப் போட்டியிடும் வேட்பாளர் முன்னாள் அமைச்சர் கோவிந்தசாமி அவர்களின் துணைவியார் குணக்குன்று கோவிந்தசாமி அவர்கள் விட்டுச் சென்ற பணியைத் தொட்டு முடிக்க அவரது துணைவியார் திருமதி பத்மாவதி அம்மையார் நிறுத்தப்பட்டிருக்கிறார்கள்—அவரை வெற்றி பெறச் செய்வதுதான் — மறைந்த கோவிந்தசாமி அவர்கள் செய்த தொண்டுக்கு நன்றி தெரிவிப்பதாகும்! புதிய ஆட்சியின் புரட்சித் திட்டங்களுக்கு தூண்டுகோலாக இருப்பதாகும்!

எந்தவித எதிர்காலத் திட்டங்களும் அற்ற நிலையில் காங்கிரஸ் இங்கே போட்டியிடுகிறது!

ஆனால் தி. மு. கழகமோ—

பசுமைப் புரட்சியை உண்டாக்கி நாட்டின் வறுமைத் துயரைத் தீர்ப்பதையும்—

குடிதண்ணீர்ப் பற்றாக்குறையே எதிர்காலத்தில் எங்கும் இருக்காது என்ற நிலையையும்—

மின்சார வசதி இல்லாத கிராமமே எதிர்காலத்தில் இல்லையெனும் நிலையையும் உருவாக்குதல் போன்றவற்றை மட்டுமின்றி — இத்தனைக்கும் மேலாக மத்திய அரசிடம் போராடி அங்கே குவிந்து கிடக்கும் அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பரவலாக்கிடச் செய்வதன் மூலம் மாநில சுயாட்சிக்கு மார்க்கம் வகுத்திடவும் தமிழக அரசு முனைந்து செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

இப்படிப்பட்ட அரசின் ஆக்கபூர்வமான பணிகளுக்கு ஊக்கமளித்திடும் வகையில் அம்மையாரை பெருவாரியான வாக்குகளால் வெற்றிபெறச் செய்வது தொகுதி மக்களின் தலையாய நன்றிக்கடனாகும்

★

6

இறந்துகிடந்த யானையின் தந்தத்தைக் கொண்டு பேய்கள் பல் விளக்கிக் கொண்டு, யானையின் எலும்பால் நாக்கை வழித்துக்கொண்டு, ஓடும் இரத்த ஆற்றிலே வாய் கழுவிக்கொண்டு, இஷ்டமான பிணத்தை வயிறு புடைக்கத் தின்னலாம்; வெறும் பிணம் தின்ன விருப்பமில்லையேல், அறுசுவை உண்டியே அங்குச் சமைக்கலாம்; அத்தனையும் அடுக்காக இருந்தன: பிணமான கலிங்கரின் வெண்பற்களைக் குவித்திடின், அரிசி! அதைக் குத்திட உரல் வேண்டுமா! இதோ, கலிங்கரிடத்து, தோல் கிழிந்து தரையில் உருண்ட முரசுகள். அவைகளிலே கொட்டி, யானைத் தந்தத்தாலே குத்திடலாம்! சமைத்திடச் சாமான் ஏராளம்! சாப்பிடவோ, சகலமும் தயார்! விருந்து தீர்ந்ததும் வெற்றிலைப் பாக்கு வேண்டுமா? குதிரையின் குளம்புகள் பாக்கு! யானைக் காதுகள் வெற்றிலை! போட்டு மெல்லட்டும் பேய்கள்!! ஓஹோ! வெண் சுண்ணம் வேண்டுமே! அதுவும் உண்டு. கலிங்கரின் கண்களில் வெள்ளைக்கு மட்டும் குறைவா!! பேய்கள் பெருவிருந்து பெறலாம் என்று கூறும் விதமாகக் கிடந்தது களம்! அத்தகைய போருக்குப் பிறகே கலிங்க மன்னன், தலை தப்பினால் போதும் என்றோடிவிட்டான். அவனைப் பிடித்துவர ஒரு படை சென்றது. ஓடி ஒளிபவரையும், செத்தவர்போல் படுத்திருப்போரையும் பிடித்திழுத்துக் கைது செய்ய ஒரு படை வேலை செய்தது. களத்தைச் சுற்றிப் பார்த்துக்கொண்டே வீரமணி வருகையில், இறந்து கிடந்த யானைக்குப் பக்கத்திலே உருண்டு கிடந்த ஒரு கலிங்கத்தானின், ஈனக்குரல் கேட்டது. குற்றுயிராகக் கிடந்தவனைக் கண்ட வீரமணி, குதிரையை விட்டுக் கீழே குதித்து, "கலிங்கப் படை தோற்றது, மன்னன் மருண்டோடிவிட்டான். நீர் ஏன் கைதியானீர்" என்று கூறிவிட்டு, வாளை உறையினின்றும் தயாராக எடுத்து உருவினான். சாய்ந்து கிடந்த கலிங்கத்தான், அணையுமுன் ஒளி விடும் விளக்குபோல், ஒருமுறை சிரித்துவிட்டு, "பிணத்தோடு பிணக்கு ஏன்? உயிரை இழக்கப்போகும் என் முன் உருவிய உடைவாள் ஏன்? என்னைக் களத்தைவிட்டு அழைத்துச் செல். உன் கூடாரத்துக்கல்ல. இங்கிருந்து சில காத தூரத்திலே ஒரு குகை இருக்கிறது. வழி நான் காட்டுகிறேன். அங்குப் போனபின், நான்—சாகப் போகும் நான்—வயது முதிர்ந்த நான், கடைசிவரை களத்திலே தீரமாக நின்று போரிட்ட நான்—இரகசியம் ஒன்றுரைக்க வேண்டும்" என்றான்.

"கபடம்! நான் கேளேன்" என்றான் வீரமணி.

"வீரனே! சாகப்போகும் என்னிடம் விளையாடாதே! வஞ்சகமல்ல நான் பேசுவது! நான் நிம்மதியாக இறக்க, என் மனத்தில் உள்ள பளுவைக் கீழே தள்ளவேண்டும்" என்றான் கலிங்க வீரன்.

கலீர் எனச் சிரித்துவிட்டு வீரமணி, "பளுவைத் தாங்க நான் சுமைதாங்கி என்று எண்ணுகிறாயோ" என்று கேட்டான்.

"ஆம்! ஒரு சுந்தரியின் வாழ்வைத் தாங்கும் சுமைதாங்கியாக்கப் போகிறேன். அந்த அபாக்கியவானின் ஆசையின் விளைவு, வேதனை உலகிலிருந்தும் விடுவிக்கப் படவேண்டும். என் மகளைப் பற்றிய மர்மம் உன்னிடம் உரைக்கப் போகிறேன். யோசித்துக் கொண்டிராதே. உன் குதிரைமீது என்னைத் தூக்கி வைத்துக்கொள். என் இரு கால்களும் துண்

டிக்கப்பட்டு விட்டன. உயிர் துண்டிக்கப் படுமுன் உன்னிடம் நான் உள்ளத்தில் உள்ளதை உரைத்திட வேண்டும் தூக்கு!" என்றான் கலிங்கன்

வீரமணிக்குப் பரிதாபம் பிறந்தது. கலிங்க வீரவயோதிகன், களத்திலே படுகாயத்துடன், குற்றுயிராகக் கிடக்கும் நேரத்திலே தன்னைக் கெஞ்சுவது கண்டு மனம் இரங்கினான். வீரமுள்ள நெஞ்சினருக்கு ஈரமும் உண்டன்றோ!

கலிங்க வீரனைத் தூக்கித் தன் குதிரைமீது சாய்த்து தனது மேலங்கியால் மறைத்துவிட்டான். குதிரை மீது தாவி உட்கார்ந்தான். "தெற்குப் பக்கமாகக் குதிரையைத் துரத்து; வேகமாகப் போ! வழியிலே, யார் நிறுத்தினாலும் நிற்காதே; என்னைக் காட்டிக் கொடுக்காதே; கோடி புண்ணியம் உண்டு" என்று வயோதிகன் திணறிக்கொண்டே கூறினான்.

குதிரை கடுவேகமாக ஓடிற்று. வீரமணி செல்வதைக் கண்டு அவனுடனிருப்போர், துணைக்காகக் கூடச் செல்லலாயினர். வீரமணி, உரத்தக் குரலில், அவர்களை நோக்கி, "தோழர்களே! நீங்கள் களத்துக் கடுத்த கூடாரத்திலேயே தங்குங்கள். நான் ஒரு அவசர வேலையாகச் செல்கிறேன். விரைவில் வருகிறேன்" என்று கூறி அனுப்பிவிட்டான்.

"நல்ல காரியம் செய்தாய் ஏது! நீ ஒரு தலைவன் போல் தெரிகிறதே" என்றான் வயோதிகன். வீரமணி சிரித்தான். தெற்கு திசையிலே இரண்டு மைலுக்குமேல் சென்ற பிறகு, கிழக்குப் பக்கமாகத் திரும்பினர். கிழக்கே ஒரு மைல் சென்ற பிறகு, சிறு குன்றுகள் தென்பட்டன. அங்குக் குதிரை நிறுத்தப் பட்டது. "மூன்றாவது குன்றிலே போ, என்னைத் தூக்கிக்கொண்டுதான் போகவேண்டும்" என்றான் வயோதிகன். வீரமணி வயோதிகனை தோள்மீது அமர்த்திக் கொண்டு, அன்புடன் அணைத்துக் கொண்டான். குன்றின்மீது கொஞ்சம் சென்றதும் ஒரு பெரிய கற்பாறை இருந்தது. அதைத் தள்ளின பிறகு குகை தென்பட்டது. இருள் சூழ்ந்திருந்தது. கிழவன் ஒரு மூலையிலே விளக்கிருக்கும் கொளுத்து என்றான். இருள் நீங்கியதும், குகை, மிக சுத்தமாக ஒருவரிருவர் வசிக்கக்கூடிய விதமாக அமைந்திருப்பதைக் கண்டான். வீரமணி, கிழக்குப்புறமாகத் திரும்பினதும், ஒரு கட்டில் கிடந்தது; அதன்மீது கலிங்க வீரன் படுக்கவைக்கப்பட்டான். வீரமணி அருகே உட்கார்ந்து கொண்டு, "ரொம்ப களைப்பாக இருக்கிறதோ? ஏதாவது பானம் பருகினால்"...என்று விசாரித்தான்.

"பானமா! எனக்கேனப்பா! ஒன்பது சோழ வீரர்களின் உயிரைக் குடித்தேன். எனக்கொன்றும் தாகவிடாய் இல்லை" என்றான் வயோதிகன். வீரமணி, புன்னகையுடன், "ஒன்பது சோழ வீரரின் உயிரைக் குடித்தீர்; ஆனால், உள்ளேபோன வீரரின் உயிர்கள் உமது உயிரைக் குடிக்கின்றன" என்றான் வீரமணி.

"என் உயிரை இழக்க நான் அஞ்சவில்லை. என் மனம் உன் உதவியால் சாந்தியானால், போதும். எனக்கு வாழ்ந்து தீரவேண்டுமென்ற அவசியமில்லை. எனக்கு எல்லாம் உண்டு; எதுவும் இல்லை! பொக்கிஷம் ஏராளமாக உண்டு. இதோ இந்தப் பக்கமாக உள்ள பேழைகளிலே உள்ள பூஷணங்கள், கலிங்க நாட்டை விலைக்கு வாங்கி விடலாம். அவ்வளவு இருக்கிறது. ஆனால் இவ்வளவு பொக்கிஷமுள்ள எனக்குப் போகம் இல்லை. மனைவி உண்டு, ஆனால் மகிழ்ச்சி இல்லை, மனைவி என்னுடன் இல்லை. மகள் உண்டு மணிபோல்! ஆனால் அந்தமணி உள்ள இடமோ எனக்குத் தெரியாது. அவளைக் கண்டுபிடித்து, என் மகளிடம், என் வரலாற்றைக்கூறி, பெற்றேனே தவிர வளர்த்தேனில்லை என்மகளை, அதற்காக என்னை மன்னிக்கும்படிக் கேட்டுக்கொண்டு, என் முயற்சியால் ஈட்டிய இந்தச் செல்வத்தை, என் காதலில் கனிந்த செல்வத்திடம் தரவேண்டும். உனது உழைப்புக்காக நீ இதிலே பாதி எடுத்துக்கொள். என் மகளை ஒரு முறை நான் கண்ணால் கண்டால், களிப்புக்கடலிலே மூழ்குவேன். கையிலே தூக்கிவைக்தேன், சிறு குழந்தையாக இருந்தபோது; இன்றுவரை கண்டேனில்லை. எங்கு இருக்கிறாளோ! என்ன கதியோ! ஏழ்மையோ! நோயோ!" என்று கூறி அழுதான்.

வீரமணிக்கு ஒன்றும் விளங்கவில்லை. வயோதிகன் மிக்க சோகத்துடன் பழங்கால நினைவினால் நெஞ்சு நெகிழ்ந்து பேசுவதை இடைமறித்துத் துன்புறுத்தவும் இஷ்டப்படவில்லை; அதிகமாகப் பேசிக் கொண்டே இருந்தால் என்ன ஆகுமோ என்றும் கவலைப்பட்டான். "தாயிருக்க மகளுக்கென்ன குறை!" என்று கேட்டான்.

"தாய்! அவளைப் பெற்ற தாய். என்னை மகிழ்வித்த அம் மாது மகளுடன் இல்லை. தாய்வேறு, மகள் வேறு; தந்தை வேறு; ஒருவரோடு ஒருவர் இல்லை, துயரக் குழம்பப்பா என்சேதி" என்று கதறினான் கிழவன்.

"பரிதாபம்; இவ்வளவு துக்ககரமான வாழ்க்கையிலே நீர் இருப்பது கேட்டு நான் மிகவும் வருந்துகிறேன். பெரியவரே! உமக்கு உதவி செய்தே தீருவேன். உமது மகளை மூன்று மண்டலங்களிலே எங்கு இருந்தாலும் கண்டு பிடிப்பேன்! இது உறுதி. வடநாடுகளிலே வதியினும் கண்டுபிடித்தே தீரு

வேன். அவளை என் தங்கையாகப் பாவிப்பேன்” என்ருன் வீரமணி.

“தங்கையாக இருக்கட்டும், அவள் எவனையேனும் மணந்து கொண்டிருப்பின்; இல்லையேல் அந்த நங்கைக்கேற்ற நாயகனும் நீயே. வீரமும் விவேகமும் கருணையுங்கொண்ட உள்ளமுடைய உத்தமனே —இந்தப்பாவியினிடம் எவ்வளவி பரிவுகாட்டுகிருய்; என்வாழ்க்கையிலே நான் எத்தனையோவித மகிழ்ச்சி கண்டேன். எவ்வளவோ துயரிலும் வாடினேன். போர் பல புரிந்திருக்கிறேன். புகழும் அடைந்தேன். பொற்கொடி போன்றவளைப் பூசித்தேன். அவள் தந்தவரம், என் மகள்; அவளை இழந்தேன். இன்று அவள் என் அருகே இருந்து, “அப்பா”! என்று ஒரு முறை அன்போடு அழைத்தால், இந்தப் பாவியின் உயிர் நிம்மதியாகப் பிரியும். ஆனல் அந்த வாய்ப்பு எனக்கு இல்லை. என் செய்வது? என் மகன்போல் இன்று நீ இருக்கிருய். நீயேஇனி என் வரலாற்றுக்கு வாரிசு!” என்று கூறிவிட்டு வயோதிகன் களைத்துச் சாய்ந்துவிட்டான். குளிர்ந்த நீரை முகத்திலே தெளித்து, மேலங்கியால் மெதுவாக வீசினன் வீரமணி. இரண்டொரு நிமிடங்களில், வயோதிகன் கண்களைத் திறந்தான். அணையப்போகும் தீபத்தின் நிலையிலிருந்தன அவன் கண்கள். வீரமணி விசனித்தான்.

“தாய்! அவளைத் தேடுவானேன்! அவள் நிம்மதியாக ஆண்டு கொண்டு இருக்கிருள். வீரனே! என் மகளின் தாய், ஒரு அரசி” என்ருன் வயோதிகன்.

வீரமணி ஆச்சரிப்பட்டான்.” அரசியா! எங்கே, யார்? நீர் ஓர் மன்னரா!” என்று பரபரப்புடன் கேட்டான்.

“நான் மன்னனல்ல! ஆனல் என் மனதைக் கொள்ளை கொண்டவள், எனக்கு காதல் மதுரத்தை ஊட்டியவள், மகளை ஈந்தவ்ள், சாதாரணக் குடியல்ல, என்போல் சாமானியமானவளுமல்ல. ஆம்! அவள் ஒரு அரசி! அன்பினல் நாங்கள் பிணைக்கப் பட்டோம். வஞ்சகத்தால் வெட்டப்பட்டது எமது அன்புச் சங்கிலி! எங்கள் காதலின் கனியும் எம்மை விட்டுப் பிரிக்கப்பட்டது. என் வரலாறு மிகமிகச் சோகமுடையது” என்ருன் வயோதிகன்.

“எந்த நாட்டு அரசியைப்பற்றி நீர் பேசுகிறீர்” என்று வீரமணி கேட்டான.

“சோழமண்டலத்துக்கும் ஆந்திரமண்டலத்துக்கும் இடையே உள்ள மலர்புரி எனும் சிற்றரசு உனக்குத் தெரியுமோ! சோழனிடமே மலர்புரி கப்பம் கட்டுவது” என்று துவக்கினன்வயோதிகன். ஆமாம்! மலர்புரிக்கு விதவை மருதவல்லி அம்மையார் அரசி! என்ருன் வீரமணி.

முழுத்தாள் நாணயம்!

—செவ்வேள்

கற்கண்டின் துண்டத்தை எப்பக் கத்தில்
கடித்தாலுங் கடிவாயில் இனிமை தோன்றும்!
கற்கொண்டே அரைக்கின்ற சந்த னத்தின்
கட்டையிலே எப்புறத்தும் மணமே தோன்றும்!
கொற்கைக்கு புகழ்தந்த முத்தை எந்தக்
கோணத்திற் பார்த்தாலும் ஒளியே தோன்றும்!
சொற்கொண்டல் அண்ணுவின் கதையை எங்கே
தொட்டாலும் அங்கங்கே சுவைகள் தோன்றும்!

நாடுகளுட் சிலவற்றைக் காணச் சென்ற
நாலடியிற் குறளுருவம் நன்ரு கச்சொல்
ஆடுவதோ என்றுசிலர் ஐயங் கொண்டார்!
ஆடுகளம் பலகண்ட அறிஞர் அண்ணு
காடுகமழ் கற்பூரச் சொற்கோ வாகக்
கடைவிரிக்க அங்குள்ளோர் எப்பா லார்க்கும்
ஈடுதரும் பேச்சாளர் இவரே என்ருர்!
ஏடுகளால் அவர்புகழைப் பாடி வைத்தார்!

ஏலுமொரு விலையுயர்ந்த மாணிக்கக் கல்
எங்கிருக்கு மோமதிப்பும் அங்கி ருக்கும்!
வாலொளிசெய் மாமன்னர் முடியென் ருலும்
வரிசெலுத்துஞ் சிற்றரசர் முடியென் ருலும்
சாலவது சார்ந்திருக்கும் முடிக ளுக்கே
தன்மதிப்பைத் தந்திருக்கும்! அதுபோல் அண்ணு
மேலவையோ கீழவையோ எதுவோ அங்கே
வீற்றிருந்தால் அவைகளுக்கே மதிப்பைச் சேர்ப்பார்

அனைத்துலக நாட்டவையில் பேசச் சென்ற
அண்ணுவின் அரசியலில் அறிவு சான்ற
வினைத்திறமை கண்டவர்கள் வியந்து நின்ருர்!
வேற்றுநடு வரசினர்க்கும் இவர்க்கும் அன்று
பனைத்துணையாய் வேற்றுமைகள் மிகுந்திருந்தும்
பலர்நடுவே தன்னுட்டைக் குறைத்துப் பேசத்
தினைத்துணையும் எண்ணுத அண்ணு உள்ளம்
திருக்குறளின் பண்பாடு தவழும் இல்லம்!

எழுத்தாளு முத்திரைகள் அச்ச டித்த
இந்நாட்டு நாணயத்தாள் அதனைச் சற்றுக்
கிழித்தாலோர் மதிப்புண்டா? இவ்வா ருகக்
கிழிபட்ட அரைத்தாளாய் முக்கால் தாளாய்க்
கொழுத்தாள வந்தசிலர் வெளிநாட் டிற்குக்
குடைதூக்கிச் சென்ருர்கள்! ஆனல் ஒற்றை
முழுத்தாளாய் வெளிநாடு சென்று மீண்ட
மூதறிஞர் தமிழ்நாட்டு முதல்வர் அண்ணு!

"இன்னும் எழுதுங்கள்"

இளங்கீரன், எம்.ஏ.,

"ஒரு கதைக்கு இருநூறு ரூபாய்! அடேயப்பா! எவ்வளவு பெரிய தொகை! இது மட்டும் கிடைத்துவிட்டால்......? கேள்விக் குறியை எழுப்புவானேன்? முற்றுப் புள்ளியை வைப்போம். அன்று வெள்ளரித் தோட்டத்தில் வேதனையோடு புலம்பினளே வேலாயி, அவள் கதையை எழுதினாலே அது நல்லமுறையில் அமையும். பணமும் கைக்கு வந்துவிடும். வந்துவிட்டால்......

பலசரக்குக் கடையில் நிற்கிறதே, பழைய பாக்கி, அதை முதலில் கொடுக்கவேண்டும். இந்த முறையாவது முழுரேசனும் வாங்கிவிட வேண்டும். புத்தகம் வேண்டும் என்று பெரியபயல் வெகுநாட்களாகக் கேட்டுக்கொண்டு வருகிறான். அவனுக்குப் புத்தகம் வாங்கவேண்டும். கிழிந்துபோன கால்சட்டையை எத்தனை நாட்களுக்குத்தான் போட்டுக்கொண்டிருப்பான் சின்னப்பயல்? அவனுக்குத் துணி வாங்கவேண்டும். சட்டையே இல்லை என்று கமலம் சொன்னாள். அவளுக்குச் சட்டை தைக்கவேண்டும். வீட்டு வாடகைப் பாக்கியை நீண்டநாள் வரை நீடிப்பது நல்லதல்ல; அந்த மனிதன் நல்லவன்; நமது நிலையைப் புரிந்து கொண்டிருக்கிறான். அதனால் கடிந்து கேட்காமல் கண்ட நேரமெல்லாம் சிரிக்கிறான். அவன் காசு நமக்கு எதற்கு? ஒரு பகுதியையாவது கொடுத்துவிட வேண்டும். எனக்கும் இன்னொரு சட்டையும் வேட்டியும் இருந்தால் வெளியிடங்களுக்குச் சென்று யாரையாவது பார்க்க வசதியாக இருக்கும். ம்...... கமலம் ஏசினாலும் சரி; பேசினாலும் சரி. எப்படியும் இன்றிரவு உட்கார்ந்துவிட வேண்டியதுதான். அடுத்த இதழிலேயே கதை வெளிவந்துவிட வேண்டும்......"

மனதிலே உறுதியை வரவழைத்துக்கொண்ட ஏகாம்பரத்தின் நடையிலும் வேகம்தானாக அதிகரித்தது. அவரது நடையைப்போல் இதயத்து எண்ணங்களும் அடங்காத ஓட்டத்தில் ஓடின. கையிலிருந்த வாரப் பத்திரிகையின் புதிய அறிவிப்பைத் திரும்பத் திரும்பப் படித்துப் பார்த்தார். ஆசை அலைமோதியது.

தானும் ஒரு எழுத்தாளனாகிவிட வேண்டும் என்ற ஆசையால் உந்தித் தள்ளப்பட்ட ஏகாம்பரம் சிறு வயதிலிருந்தே எழுதத்துவங்கினார். இரவு பகலாகக் கண் விழித்துப் பல கதைகளை எழுதிப்பத்திரிகைகளுக்கு அனுப்பினார். அவற்றிலே பல திரும்பி வந்தன. அதைக் கண்டு அயர்ந்துவிடாது மீண்டும் மீண்டும் கதை எழுதி அனுப்பினார். கதையின் கருத்தும் நடையின் நயமும் நன்றாக இருந்தாலும் ஆரம்ப எழுத்தாளர் என்ற காரணத்தைக்காட்டி சில பத்திரிகைகள் அவரது கதையைப் பிரசுரித்து அவருக்கு எழுத்தாளர் என்ற பட்டத்தைக் கொடுத்துவிட்டு விற்பனையை அதிகமாக்கிக்கொண்டன. ஆனால் எழுத்தாளருக்கும் பணம் தேவைப்படும் என்பதை அவைகள் முழுக்க முழுக்க மறந்துவிட்டதுமல்லாமல் நம்பவும் மறுத்துவிட்டன. சில பத்திரிகைகள் மட்டும் சில வேளைகளில் சிறு தொகையை அனுப்பி வைக்கும். அதுவே ஏகாம்பரத்திற்குப் பெரிய புதையல்!

பணம் அனுப்பாத பத்திரிகைகள் அவரது புகைப்படத்தைப்போட்டுப் பெரிதாக விளம்பரம் செய்தன. அது அவருக்குப் பெருமகிழ்ச்சி! அந்த மகிழ்ச்சியில் அவர் நிறைய எழுதிக் குவித்து வந்தார்.

பெயரையும் புகழையும் மூலதனமாக வைத்துத் திருமணமும் செய்து கொண்டார், ஏகாம்பரம். அவரிடம் கழுத்தை நீட்டிய காரிகையோ மனத்தாலே கோட்டை கட்டினாள். சீரோடு சிறப்போடு செழிப்பாக வாழலாம் என்று கனவு கண்டாள். காலம் எப்படியோ ஓடியது. ஒன்று ......இரண்டு...மூன்று...நான்கு...... என்று குழந்தைகளின் எண்ணிக்கை வளர்ந்தது; வருமானம் தளர்ந்தது. ஏமாற்றமும் தேவையும் அவளுக்கு அதிகமாயின. ஆனால் ஏகாம்பரத்தின் எழுத்து மோகமும் தரித்திர நிலையும் குறையவே இல்லை. தன்னுடைய இந்த நிலையை அவர் நன்கு உணர்ந்தவர்தான். என்றாலும் எழுத்தாளன் என்ற பெருமையையும் தன்மானத்தையும் விட்டுக் கொடுக்க விரும்பாத அவர் தன் மனைவி, குழந்தைகளோடு படும் பாட்டைப் பார்க்கும் போதெல்லாம் பஞ்சத்தை மறந்து நெஞ்சத்தை நிமிர்த்தி, "இதோபார், கமலம்! நமது கதைக்கும் ஒரு காலம் வரும்; பத்திரிகைக்காரர்கள் நம்மைத்தேடி வீட்டிற்கு வரத்தான் போகிறார்கள். அப்போது நமது வறுமை எல்லாம் நீங்கும்; பையிலும் கையிலும் பணம் தூங்கும்." என்று மனம் நொறுங்கிப் போன அவளிடம் வானளாவ அடித்து வீசுவார்.

இதையெல்லாம் கேட்டுச் சில வேளைகளில் அவள் பூனைபோல் அமைதியாகப் போய் விடுவாள்; சில வேளைகளில் புலிபோல் சீறி விழுவாள். அவளது கோபதாபங்களைக் கண்டு மனம் பொங்கமாட்டார் ஏகாம்பரம். அவைகளை வைத்துப் புதுக்கதைக்கு அடிப்படைட்

போடுவார். இது அவரது அன்றாடப் பொழுது போக்கு.

புதிய வாரப் பத்திரிகையைக் கையில் வைத்துக்கொண்டு புதிய எழுச்சியோடு ஓடிவந்த ஏகாம்பரம், "கமலம்! இதோபார்! இந்தப் பத்திரிகைக்குக் கதை எழுதினால் இருநூறு ரூபாய் கொடுப்பார்களாம். நாளைக்கே நானும் ஒரு கதை அனுப்பப்போகிறேன். நிச்சயம் நமது கதையை எடுத்துக்கொள்வார்கள்" என்றார்.

பசியால் துடித்த பச்சைக் குழந்தையின் பசியமர்த்த வகை தெரியாமல் தவித்த கமலத்திற்குப் புளித்துப் போன பழைய பல்லவியைக் கேட்டதும் எரிச்சல் எரிச்சலாக வந்தது. வாய்க்கு வந்தவாறு பொரிந்து தள்ளினாள்.

"ஆமா! அதில் ஒன்றும் குறைச்சல் இல்லை. ஒருவேளைச் சோற்றுக்குத்தான் வழியைக் காணோம். கதை எழுதுகிறாராம், கதை! உங்கள் கதையைக்கொண்டு உடைப்பில் போட்டுவிட்டு உங்களோடு படித்தவர்களைக் கொஞ்சம் நினைத்துப் பாருங்கள். அவர்களெல்லாம் எவ்வளவு பெரிய உத்தியோகத்தில் காரோடு சீரோடு எப்படி இருக்கிறார்கள்! அவர்களுக்கு மதிப்பென்ன? மரியாதை என்ன? கை நிறையப்பணம் சம்பாதித்துக்கொண்டு எவ்வளவு வசதியோடு இருக்கிறார்கள்! அவர்கள் வீட்டுப் பெண்களும் எவ்வளவு விலை உயர்ந்த துணி மணிகளும் நகைகளும் அணிகிறார்கள்! அவர் வெளியில் வந்தால் மற்றவர்கள் எவ்வளவு மதிப்பாக நடத்துகிறார்கள்! உங்களுக்குக் கழுத்தை நீட்டிய நானும் உங்கள் வயிற்றில் பிறந்த குழந்தைகளும் இதுநாள் வரை என்ன சுகத்தைக் கண்டோம்? நீங்களோ 'கதை கதை' என்று காலமெல்லாம் கட்டி அழுகிறீர்கள். கண்டபலன் ஒன்றும் கிடையாது. பெரிய எழுத்தாளர் என்று பெருமை பேசுகிறீர்கள்! ஒரு பயல் உங்களை மதிக்கிறானா? வேலைக்காரனை விடக் கேவலமாக நடத்துகிறார்கள்"

மனதிலே தேக்கி வைத்திருந்த ஆத்திரத்தை எல்லாம் ஆசை தீர எடுத்துக் கொட்டினாள். கமலம் மற்றப் பெண்களைப்போல் நவநாகரீகமாக உண்ணவும் உடுத்தவும் உயர்ந்த இடத்தில் பழகவும் நீண்ட நாட்களாகவே கனவு கண்டவள். அவள். ஆனால் தன்னைக் கைப்பிடித்த கணவரோ கதைப் பைத்தியமாகி குடும்பத்தை வறுமைப் படுகுழியில் தள்ளிக் கொண்டிருந்தார். அதைக்கண்ட அவளுக்கு ஆத்திரம் வராமல் ஆனந்தமா வரும்? கோபம் கொள்ளாமல் கொஞ்சவா நினைப்பாள்? பொறுமைக்கும் ஒரு எல்லை உண்டல்லவா?

போதும் போதுமென்ற அளவுக்குப் பேசித் தீர்த்துவிட்டாள். ஆனால் அவளுக்குப் பதில் சொல்ல வாயில்லாமல் போனார் ஏகாம்பரம். அதற்குமேல் அவள் முன்னால் நிற்க அவருக்குத் துணிவில்லை. விடுவிடென்று தன் அறைக்குள் சென்று அமர்ந்து கொண்டார். அவரது மனதில் இருநூறு ரூபாய் நிலைத்து நின்று நர்த்தனமாடியது. ஆனால் கதை எழுதக் கருப்பொருள் தென்படவில்லை; கமலத்தின் கடுகடுப்பான வார்த்தைகள்தான் ஈட்டி போல் தாக்கி இருகூறாகப் பிளந்தன. எதிர்கால வாழ்வில் எண்ணத்தைச் செலுத்தினார், அது இருண்டு கிடந்தது.

இரவு மணி பனிரண்டாகியும் இருந்த இடத்தைவிட்டு அவர் எழுந்திருக்கவே இல்லை. பசியையும் தூக்கத்தையும் அவர் வென்று பழகியவர். அதனால் அவைகள் அவரிடம் அணுகவில்லை. ஆனால் அவைகளோடு போராடிப் போராடி அலுத்துப்போன அவரது குழந்தைகளோ அயர்ந்து தூங்கிவிட்டார்கள். அவர்களது கூக்குரல் அடங்கிவிட்டது. அந்த நட்ட நடுநிசியில் யாரோ தன்னை நோக்கி நடந்து வரும் காலடி யோசை கேட்டது அவருக்கு, திரும்பிப் பார்த்தார். அவரை நோக்கிக் கமலம் வந்து கொண்டிருந்தாள். 'இன்னும் என்னென்ன சொல்லி என்னைக் கொல்லப் போகிறாளோ' என்று உள்ளுக்குள் பயந்தவாறு தலை கவிழ்ந்து கொண்டார்.

அருகில் வந்து நின்ற கமலம் அவரது தலையை அன்போடு வருடியவாறு அமைதியாகப் பேச்சைத் துவங்கினாள்.

"என்னை பாருங்க. நான் சொல்கிறேன் என்று என் மீது கோபிக்காதீர்கள்! நமது குடும்பம் பெரிதாகிக் கொண்டே போகிறது. வருமானமோ குறைந்து கொண்டு போகிறது. இந்த நிலையில் நீங்கள் இன்னும் கதை கதை என்று அலைந்தால் நமது நிலைமை மிகவும் மோசமாகிவிடும். இப்போதே எல்லோரும் பார்த்துச் சிரிக்கிற நிலைக்கு வந்துவிட்டது. கதை ஒரு நாளும் சோறு போடாது. அதனால் அவைகளை எல்லாம் மூட்டை கட்டி வைத்துவிட்டு என்னோடு புறப்படுங்கள். குழந்தைகளை அத்தையிடம் விட்டுவிட்டு நாம் இரண்டுபேரும் நாளைக் காலையில் பட்டணத்திற்குப் போவோம். அப்பா வேலை பார்க்கிற கம்பெனியில் எப்படியாவது ஒரு வேலை வாங்கித் தரச் சொல்வோம். நீங்கள் என்னோடு வந்தால் மட்டும் போதும். நானே அப்பாவிடம்

வண்ணமொழி வாழ்த்து!

சொட்டுகின்ற கண்ணீரும் கட்டுடலின் செந்நீரும்
கொட்டுகின்ற பேய்மழையாய்ப் பட்டாலும்—பட்டொளிரும்
பெட்டகமாம் பைந்தமிழைச் சுட்டிபிழை சொல்வோரை
வட்டமிட வைத்திடுவேன் வாழ்ந்து.

வாழ்ந்துலகில் வாழ்த்திடஎன் வாய்மொழியாம் தீந்தமிழைத்
தாழ்ந்ததெனச் சொல்வோரை வீழ்த்திடுவேன்—ஆழ்ந்ததனில்
ஏற்றமுறச் செய்வோரை போற்றிவரும் நல்லோரை
தூற்றிவரும் வாயடைப்பேன் தேர்ந்து.

தேர்ந்தவுடன் செந்தமிழின் தேனெடுத்துத் தேருதார்
சேர்ந்தமுகம் சேர்த்திடவே செய்திடுவேன்—ஆய்ந்தமனம்
அத்தனையும் தண்டமிழை சொத்தெனவே காத்துவர
இத்தரையில் ஆக்கிடுவேன் ஈர்த்து.

ஈர்த்துமன வீட்டினிலே இன்பத்தமிழ் போற்றஅறம்
வார்த்தசுடர் அண்ணா தான் வையகமே—சேர்ந்தறியும்
அண்ணலவர் காத்தமொழி நன்னயமற் றுவதெனின்
எண்ணற்றோர் நாமிருந்தும் என்?

என்னென்ற கேள்விகுறி ஏன்வந்த திங்கென்றால்
வண்டமிழின் மண்டுபுகழ் வாழ்ந்திடவே!—மண்ணகத்தே
அண்ணனவர் காட்டியநேர் நன்னெறியைப் பின்பற்றி
வண்ணமொழி பாரல்பெறுவேன வாழ்த்து.

—பாவலர் இலக்கியன்.

சொல்லி எல்லா ஏற்பாடும் செய்கிறேன். நமக்கென்று ஒரு உத்தியோகம் இருந்தால்தான் மாதந்தோறும் நிரந்தரமாக ஒரு வருமானம் வரும். அதை வைத்துக் குடும்பத்தை ஓட்டினால் மற்றதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம், நீங்கள்தான் மனம் வைக்கவேண்டும்”

ஆக்திரமாகப் பேசியவள் அன்பொழுக அறிவுரையும் சொன்னாள். அவள் கூறிய திட்டத்தை அப்படியே ஒப்புக்கொள்ள வேண்டும் போலிருந்தது ஏகாம்பரத்திற்கு.

“நல்ல வேலையாக நான் வாங்கித் தருகிறேன்” என்று கூறி வந்த மாமனாரிடம் எத்தனையோ முறை தட்டிக் கழித்துவிட்டார். படித்துப் பட்டம் வாங்கிக் கொண்டு தன்னிடம் ஒரு திறமையையும் வைத்துக் கொண்டு பிறர் கையை எதிர் பார்த்து பிறர்க்கு அடிமையாகி வாழ்வதை அவர் விரும்பவில்லை. அது தன்னிலைக்குக் கீழாகவும் தரக்குறைவாகவும் எண்ணினார், தானே உழைத்து முன்னுக்கு வந்து தன் காலிலேயே நிற்க வேண்டுமென்றும் நினைத்தார்.

ஆனால் தன் விரலே தன் கண்ணைக் குத்திவிடுவதுபோல் தன் மனைவியே தனது திட்டத்தை உடைத்துத் தவிடு பொடியாக்கி விட்ட பிறகு அவரால் ஒரே நிலையில் நிற்க முடியவில்லை; தடுமாறினார். மனைவியைப் பற்றியும் குழந்தைகளைப் பற்றியும் எண்ணிப் பார்த்தார். ‘அவளுக்கும் ஆசை இருக்கத் தானே செய்யும்? என்றால் அவள் என்ன சுகத்தைக் கண்டாள்? குழந்தைகள்தான் என்ன இன்பத்தைக் கண்டன? என்றோ அடையப் போகும் இலட்சியத்திற்காக இப்போதே இவர்களைப் போட்டு வாட்டி வதைப்பானேன்? வாழ்வைப் பாழாக்குவானேன்? ஏதாவது ஒரு வேலையில் நுழைந்து, கமலம் சொன்னது போல நிரந்தரமாகச் சம்பாதித்தால் என்ன?’

மனம் நெகிழ்ந்தது; இலட்சியம் தளர்ந்தது. புது வழி பிறந்தது. நிமிர்ந்து உட்கார்ந்தார். குனிந்து நின்ற தனது மனைவியைப் பார்த்து. ‘கமலம்! நாளைக்கே நாம் பட்டணம் போவோம், மாமாவைப் பார்த்து ஒரு வேலை வாங்கித் தரச் சொல்லுவோம், நான் உன்னோடு வரத் தயார்” என்று கூறினார். ஆனந்தப் பரவசத்தால் அவள் வாயடைத்து நின்றாள்.

மறுநாள் காலையில் சென்னை செல்லும் ஏரிக் இரயிலில் வழக்கம் போல் கூட்டம் அதிகமாக இருந்தது. இங்கும் அங்கும் ஓடிக் கடைசியாக ஒரு பெட்டியில் தன் மனைவி கமலத்தோடு ஏகாம்பரம் ஏறிக் கொண்டார்.

அங்கிங்கு அசையவே முடியாத போது உட்கார எங்கே இடம் கிடைக்கும்? இருவரும் ஒரு ஓரமாக நின்றுகொண்டார்கள். ஏகாம்பரத்திற்கு எப்படியோ இருந்தது! ஒரு பயல் உங்களை மதிக்கிறானா? வேலைக்காரனை விடக் கேவலமாக நடத்துகிறார்கள்’ என்று அழுத்தம் திருத்தமாக—நெஞ்சில் அடித்துச் சொன்னாளே அது அப்போதுதான் அவருக்கு நினைவு வந்தது. மனதை என்னவோ செய்தது. சுற்று முற்றும் ஒருமுறை பார்த்தார். தெரிந்த முகம் எதுவும் தென்படவில்லை. ‘அப்பாடா, தப்பினேம்’ என்று தனக்குள்ளே சொல்லியவாறு தலை கவிழ்ந்துகொண்டு கால் கடுக்க நின்றார்.

“ஐயா! நீங்கள், எழுத்தாளர் ஏகாம்பரம்தானே?” என்ற கனத்த குரல் கேட்டுத் திகைப்போடு தலை தூக்கிப் பார்த்தார் ஏகாம்பரம்! மேல் நாட்டுப் பாணியில் விலை உயர்ந்த வெளிநாட்டுத் துணியணிந்து பக்கத்துப் பெஞ்சில் உட்கார்ந்திருந்த வாலிபன் ஒருவன் தான் அப்படித் திடீரென்று கேட்டான். அவருக்கு என்ன பதில் சொல்வதென்றே தெரியவில்லை. திரையில் கண்டு மகிழ்ந்த சினிமா நடிகையைத் திடீரென்று நேரில் கண்டுவிட்டதுபோல் அவன் ஆவல் பொங்க அவரது முகத்தையே பார்த்தான். ஒருவாறு தன்னைச் சமாளித்துக் கொண்ட ஏகாம்பரம் “ஆமாம்” என்று அடக்கத்தோடு சொல்லிவிட்டு நிறுத்திக் கொண்டார். அவன் உடனே அவருக்கு வணக்கம் சொன்னான்.

“ஐயா! நீங்கள் நிற்கிறீர்களே! உட்காருங்கள் இப்படி” என்று சொல்லி அவன் எழுந்தான்.

“வேண்டாம். நீங்கள் உட்காருங்கள். இன்னும் கொஞ்ச தூரம் தானே! நாங்கள் நின்றுகொண்டே வருவோம்” என்றார் ஏகாம்பரம். அந்த வாலிபன் விடவில்லை. கையைப் பிடித்து இழுத்து அவரை அங்கு உட்கார வைத்தான், அவர் உட்கார்ந்தார் கமலமும் அருகில் உட்கார்ந்துகொண்டாள்.

“நீங்கள் எழுதிய [illegible] கதைகளை நான் தவறாமல் படிப்பேன். உங்க

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகம்

பொதுச்செயலாளர் அறிக்கை

திராவிட மாணவர் முன்னேற்றக் கழகப் பொது மாநாட்டுப் பொறுப்பாளர்களின் கூட்டம் பொதுச்செயலாளர் தலைமையில் 24-11-69 திங்களன்று சட்டமன்ற தி. மு. க. அலுவலகத்தில் நடைப்பெற்றது. அதுபோது கீழ்கண்ட முடிவுகள் ஒருமனதாக எடுக்கப்பெற்றன.

தமிழகம் முழுதுமுள்ள கல்வி நிலையங்களில் மாணவர்களுக்குத் தேர்வுகள், விடுமுறை நாட்கள் முதலியவற்றைக் கணக்கில் கொண்டு பொது மாநாட்டை வரும் 1970-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 24, 25 நாட்களில் மிகச் சிறப்பாக நடத்துவதென்றும், அதற்கேற்ப ஏற்பாடுகளை மேற்கொள்வதென்றும் முடிவுசெய்யப்பட்டது. மாநாடு சென்னையில் எழும்பூர் பெரியார் திடலில் நடைபெறும்.

மாணவர் கிளைக் கழகச் செயலாளர்கள் மாநாட்டு நன்கொடைப் புத்தகங்களை மாநாட்டுப் பொருளாளரிடம் இருந்து நேர்முகமாகவோ, அஞ்சல் மூலமாகவோ பெற்றுக்கொண்டு விரைந்து வசூலிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாநாட்டு வரவேற்புக் குழு உறுப்பினர்கள் ரூ. 10 பொருளாளரிடம் செலுத்திவரவேற்புக் குழு உறுப்பினர்களாகத் தங்களைப் பதிவு செய்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

பொருளாளர் முகவரி:

பொருளாளர்,
தி மா. மு. க. பொதுமாநாடு,
207. சட்டக் கல்லூரி விடுதி,
சென்னை-10.

ளது கதையும் நடையழகும் எனக்கு மிகவும் பிடிக்கும். கடந்த மாதம் வெளிவந்த கதையோடு உங்கள் படமும் வெளிவந்திருக்கிறதே! அதைப் பார்த்துத்தான் நான் உங்களை அடையாளம் கண்டு கொண்டேன். இதோ இருக்கிறதே அந்தப் படம்!'' என்று சொல்லிக் கொண்டே கதை வெளிவந்திருந்த பத்திரிகையை அவன் எடுத்துக்காட்டினான். அங்கிருந்த எல்லோரும் அதை ஆவலோடு வாங்கிப் பார்த்தார்கள்.

''ஓ! நீங்கள்தான் அந்த எழுத்தாளரா? கடந்த மாதம் வெளிவந்த இந்தக் கதையை நானும் படித்தேன். நல்லநடை; புதுமாதிரியான கருத்து. நான் எப்போதும் ஆங்கிலக் கதைதான் படிப்பது வழக்கம். ஆனால் இந்தக் கதையைப் படிக்கச் சொல்லி என் நண்பர் தூண்டினார். அதனால் படித்துப் பார்த்தேன். சிறுகதை மன்னன் மாபசான் போன்றவர்கள் தமிழ் நாட்டிலும் இருக்கத்தான் செய்கிறார்கள் என்று அதன் பிறகுதான் புரிந்துகொண்டேன்,'' சென்று அருகிலிருந்த ஒருவர் அறிமுகம் இல்லாமலேயே புகழ் பாடினார்.

''நான் மலேசியாவில் இருக்கிறேன். தாய் நாட்டைப் பார்ப்பதற்காக வந்தேன். எங்களது தமிழ் இளைஞர் சங்கத்திலிருந்து என்னை அனுப்பிவைத்திருக்கிறார்கள். உங்களையும் சந்திக்கவேண்டும் என்பது எனது பயணத் திட்டத்தில் ஒரு பகுதி. எல்லா இடங்களையும் திட்டமிட்டபடி பார்த்துவிட்டேன். உங்களைத்தான் பார்க்கவேண்டியபாக்கி இருந்தது. எதிர்பாராத விதமாக உங்களை நான் இங்கேயே சந்தித்துவிட்டேன். நாளை நான் சென்னையில் தங்குகிறேன். நீங்களும் என்னோடு தங்கவேண்டும். உங்களோடு நின்று நான் புகைப்படம் எடுத்துக்கொள்ள வேண்டும். நீங்கள் அடுத்த மாதம் மலேசியாவுக்கு வாருங்கள். எங்கள் சங்கத்திலிருந்து உங்கள் சிறுகதைகளைத் தொகுத்துப் புத்தகமாக வெளியிட முடிவு செய்திருக்கிறோம். அதற்காக உங்களிடம் முன் அனுமதி பெற முறையோடு கடிதம் வரும். நீங்கள் சம்மதித்தால் பணமும் அனுப்புவோம். நீங்கள் மலேசியா வரும்போது எல்லாவிபரங்களையும் நேரில் பேசிக் கொள்ளலாம். உங்களது பயணத்திற்கான ஏற்பாடுகளை நானே செய்வேன்.'' என்று பேசிக்கொண்டே போன வாலிபன் எதையோ மறந்துவிட்டு நினைவுபடுத்திக்கொண்டவன்போல் ''மறந்துவிட்டேன் பார்த்தீர்களா! இதிலே உங்களது கையெழுத்தைப் போடுங்கள்'' என்று ஒரு சிறிய நோட்டுப் புத்தகத்தை எடுத்து அவரிடம் நீட்டினான். அவர் அதில் கையெழுத்துபோட்டுக்கொடுத்தார்.

''ஐயா! நீங்கள் இன்னும் நிறையக் கதை எழுதுங்கள்; உங்களது நடையும் துடிப்பும் யாருக்கும் வராது. உங்களது வாசகர்கள் என்ற முறையில் எங்கள் சங்கத்தின் சார்பில் உங்களுக்கு இந்தச் சிறிய பரிசுப் பொருளைக் கொடுக்கிறோம். நீங்கள் தயவுசெய்து பெற்றுக் கொள்ளவேண்டும்'' என்று சொல்லி சித்திர வேலைப்பாடு நிறைந்த சிறிய—அழகிய பெட்டி ஒன்றை எடுத்து அவன் நீட்டினான்.

''நீங்கள் என்னை அதிகமாகப் புகழ்கிறீர்கள். இதெல்லாம் எனக்கு வேண்டாம் உங்களது அன்பும் பாராட்டுமே எனக்குப் போதும்'' என்று அந்தப் பரிசை வாங்க மறுத்தார் ஏகாம்பரம்.

''நீங்கள் அப்படிச் சொல்லக் கூடாது. நான்கு வரியில் ஒழுங்காக ஒரு கடிதம் எழுதக்கூட எங்களால் முடிவதில்லை. கோர்வையோடு கொஞ்சு தமிழில் நீங்கள் எவ்வளவு அழகாகக் கதை எழுதிவிடுகிறீர்கள். உங்களது திறமைக்கு இது போதாது. இன்னும் எவ்வளவோ கொடுக்கலாம் இப்போது இதை நீங்கள் வாங்கிக்கொள்ளுங்கள்'' என்று பக்கத்திலிருந்தவர் சொன்னார்.

ஏகாம்பரத்தின் கண்கள் பனித்தன. தயக்கத்தோடு பரிசுப் பெட்டியை வாங்கித் தன் மனைவி கமலத்திடம் கொடுத்தார். அங்கு நடந்த நிகழ்ச்சிகளை எல்லாம் கண் கொட்டாமல் பார்த்துக் கொண்டிருந்தாள் கமலம். ஏகச்சக்கரவர்த்தியின் முன்னால் குறுநில மன்னர்கள் தாழ்ந்து வணங்கி நிற்பதுபோல் தன் கணவர் முன்னால் அங்குள்ளவர்கள்இருப்பதாக அவள் உணர்ந்தாள். பரிசுப் பெட்டியை மெல்லத் திறந்து பார்த்தாள். அதனுள் விலையுயர்ந்த பேனா, மோதிரம் மற்றும் தங்கத்தாலான சில பொருள்களும் இருந்தன. அவளுக்கு ஆனந்தமும் ஆச்சரியமும் பிடிபடவில்லை. பூரிப்பும் பெருமிதமும் பொங்கத் தன் கணவர் முகத்தைப் பார்த்தாள். ''நீங்கள் இனி எந்த வேலையும் பார்க்க வேண்டாம். வீட்டிலேயே இருந்து கதை எழுதினால் போதும். வயிறு நிறைந்தால் போதாது; மனம் நிறைய வேண்டும். பணம் வந்தால் போதாது. பேரும் புகழும் வேண்டும்'' என்று அவள் வாய் திறந்து சொல்லவில்லை. அவள் பார்த்த அந்தப் பார்வைக்கு அதுதான் பொருள்!

★

வருவாயோ...?

குமா. கருப்பையா.

என்னுயிராய் ஆனவளே
எண்ணத்தில் வாழ்பவளே
கன்னலடி உன்னுடைய பேச்சு—நீலக்
கண்பார்வை மின்னலது வீச்சு

மலையருவித் தென்றல்வர
மலர்விழியை மூடுகிறாய்
சிலையுருவாய் ஆகின்றாய் பெண்ணே—உனைச்
சேர்த்தணைக்கத் துடிக்கின்றேன் இன்னே

தூக்கத்தின் இடையினிலும்
தொந்தரவு செய்பவளே
ஏக்கத்தால் வாடுதடி நெஞ்சம் நமை
எதிர்பார்த்து இருக்குதடி மஞ்சம்

சலசலக்கும் ஓடையென
சலங்கையொரு ஓசையிட
கலகலென சிரித்தாயே முல்லால்—கோடி
கதைபேசி நின்றாயே கண்ணால்

வாழையெனும் தொடைபின்ன
வாசமலர் முக மின்ன
சோழநதி காவிரியாய் வந்தாய்—என்
சோர்வுக்கு நல்மருந்து தந்தாய்

புத்தமுதப் பெட்டகமே
புனையாத ஓவியமே
நித்தமெனை வாட்டுகிறாய் கன்னி—நாம்
நிழலாவோம் இருமனதும் பின்னி

மைதீட்டும் விழிகளினால்
மயல்கூட்டிச் சென்றவளே
கைநீட்டி உனையழைத்தேன் பக்கம்—அதை
கண்டவுடன் ஏனடியோ வெட்கம்

விளையாடும் கரத்தவளே
வளர்மதியின் முகத்தவளே
விளையாட வருவாயோ இன்று—மன
விழைவோடுதருவாயோ ஒன்று!

அண்ணாவின் சிறந்த சிறுகதைகள்!

‘அழகிலே பலவகை உண்டு என்கிறார்கள்; இருவகை அவற்றிலே முக்கியமானவை.

ஒன்று பால் போன்றது; மற்றது கள் போன்றது. முன்னது இனிப்புடன் வலிவைக் கூட்டித் தருவது; மற்றது போதைத் தருவது’

—என்று அழகுக்கு அருமையானதோர் விளக்கம் கொடுத்துவிட்டுத் தன் சிறுகதையின் கதாநாயகி—அவள்தான், சொக்கி—யை (பெயரைப் படித்ததுமே நம் மனமும் சொக்கி விடுகிறதே!) எவ்வளவு அழகாக அறிஞர் அண்ணா அவர்கள் வர்ணிக்கிறார் பாருங்கள்!

...சொக்கி, பாற்குடம்! போதை ஏற்றிடும் மினுக்கு, குலுக்கு, தளுக்கு அவள் அறியாதது. இளமை இருந்தும் அதற்கேற்ற கவர்ச்சி அமையப் பெறுததால், பூசுவனவும் பூண்பனவும் தாங்கிக் கொண்டு, உலவிடும் நாகரிக நாரிமணி அல்ல சொக்கி; ஆற்றோரத்து தென்னையிலே தொங்கிடும் செவ்விளநீர்—கொல்லை மேட்டுச் செங்கரும்பு—மூங்கிலுக்கு வண்ணம் பூசி செங்கரும்பு போலாக்கிக் காட்டலாம்—செங்கரும்பு ஆகிவிடாது...

அப்பப்பா...! எப்படி வர்ணிக்கிறார் இளமங்கையை!! படிப்போருக்கு இன்பக் கிலுகிலுப்பூட்டும் இத்தகைய வசனங்களுக்கும் குறைவேது இவர் கதைகளில்!

கிராமத்துப் பெண் ‘சொக்கி’யை மனமாறக் காதலிக்கிறான், அவ்வூர் பழக்கடைக்காரர் பரமசிவத்தின் மகன் பூங்காவனம்!

முடக்குவாத நோயால் முடங்கி விட்ட பரமசிவம், தன் மகன் பூங்காவனத்திற்குத் தன்னைப்போல்திறமையாக வியாபாரம் செய்யத் தெரியவில்லையே என்று மனமுடங்கிப் போகிறார்!

‘தப்பு தண்டாவோ’ கெட்ட நடவடிக்கையோ’ இல்லாத பூங்காவனத்திற்குத் திறமையும் இல்லாது போனதால், தந்தையைப் போல் வியாபாரம் செய்ய முடியவில்லை.

திடீரென்று வந்து, இவனுக்கு எதிர்த்தாற்போல் இன்னொரு பழக்கடையை வைத்துவிட்ட வேளியப்பன், வியாபார சூட்சுமங்களை அறிந்து அதன்படி வியாபாரம் செய்து பெரும் பணக்காரனாகி விடுகிறான்!

கடைகளுக்குக் கூடையிலே பழம் கொண்டுவந்து கொடுக்கும் சொக்கி, பூங்காவனத்தின் மாமன் மகள்தான் என்றாலும், வேளியப்ப

அன்பு. நாராயணன்

னுக்கும் ஏதோ ஒரு தூரத்து உறவு. கண்ணுக் கழகா ஒரு பெண் இருந்தால், ‘உறவு’ உறவாடச் சொல்லவா வேண்டும்?

பூங்காவனத்தோடு ‘பேச்சு’க் கொடுக்கும் சொக்கி, வேளியப்பனோடும் பேசத் தவறமாட்டாள்! அவனோடு ‘தன் சொக்கி’ பேசும் போதெல்லாம், பூங்காவனத்தின் புருவம் நெறிக்கும்; உடம்பெல்லாம் கொதிக்கும்; பொங்கிவரும் கோபத்தில் அவனைக் கொலை செய்திடவும் துணிந்திடுவான்! தன் எரிச்சல், கோபம், ஏமாற்றம் அத்தனையையும் தன்னோடு பேச வரும்போது சொக்கியிடம் கொட்டுவான்!

கோபத்தோடு பேசும் அவனைத் தன் சாமர்த்தியமான பேச்சால் அவனையே மடக்கிவிடுவாள், சொக்கி!

‘அய்யே! ஆம்பிள்ளையைப் பாரு! மனசு உருகலாம்; கரையலாம் என்னாட்டம் பொம்பளைப் பிள்ளைக்கு; இம்மாம் பெரிய ஆம்பிள்ளைக்கு மனசு பதறலாமா?’

‘என்னைக் கேட்கறயா அந்த கேள்வி...’

‘ஏன்! போயி, உங்க அப்பாரைக் கேட்கவா...?’

‘அய்யே......போய், அனுமார் கோவிலு அய்யரைக் கேளு’

‘கோவிலிலே மட்டும் தான் இருக்குதா அனுமாரு...’

‘என்ன சொன்னே! என்ன சொன்னே சொக்கிப் பொண்ணே! என்னை அனுமாருன்னு குத்திக் காட்டிப் பேசறயா?’

‘அய்யோவ்! நீ ஏன்யா அனுமாராகப் போறே...பெரிய மலையைத் தூக்கினவரு அனுமாரு. உனக்குத்தான் கூடை நிறைய மாம்பழம் இருந்தா, தூக்க துணைக்கு ஒரு ஆள் வேணுமே, உன்னைப் போய் சொல்வேனா, அனுமார்னு...’

—இப்படிப்பட்ட நையாண்டி உரையாடல்களை தனக்கே உரித்தான நடையில் நம் அண்ணன் ஒருவரால் தான் எழுத முடியும்! தன்னை அனுமார் என்று அவள் சொல்லிவிட்டாளே யென்று வேதனைப்படும் அவனை, மேலும் அவளைப் பேச விட்டு, ‘உன்னை அனுமார்னு சொல்றதுக்குக்கூட உனக்கு யோக்யதை கிடையாதே’ என்று அவள் மேலும் ‘கிண்டி’ பேசும் பேச்சு...! அப்பப்பா...!! பெரிய குறும்புக்காரியாயிருக்கிறாளே! பொல்லாத கோபம் கொண்டவனையும் ‘குறும்புத்தனமாக’ எழுதி சிரிக்க வைத்திடும் அண்ணாவின் ஆற்றலை அறியாதார் யார்?

குறும்புத்தனம் ஒருபுறம், இருந்தாலும், சொக்கி, மெல்ல மெல்ல ‘வேளியின் பக்கமே போவதாக

> பேரறிஞர் அண்ணா அவர்கள் “சொக்கி” எனும் தலைப்பில், 13—6—’65ல் “காஞ்சி”யில் எழுதிய சிறுகதை பற்றிய ஒரு திறனாய்வே இது.

உணர்கிருன், ஆகவே, வேளியைப் போலவே தானும் நடக்க முயல்கிருன். வியாபாரத்திலா? இல்லே! பிறகு...? வேளியைப் போலவே பாடி அரிதாரம் பூசி ஆடி, நடிகளுவதற்கு! வேளி கலந்துகொள்ளும் கூத்தில் இவனும் கலந்துகொள்கிருன். அவனேத் தோற்கடிப்பதற்கு. ஆளுல் இவன் கூத்தே ஒரு கூத்தாகிவிடுகிறது! மக்கள் கேலிக் குரலில் இவனேக் கிண்டல் செய்கிருர்கள். கடைசியில் நல்ல நடிகன் என்பதற்கான தங்கமெடல் வேளியப்பனுக்கே கிடைக்கிறது.

மெடல் கிடைக்கப் பெற்ற வேளிக்குக் கையோடு கையாக சினிமாவில் நடிப்பதற்கும் 'சான்ஸ்' கிடைத்து விடுகிறது. இவ்வளவையும் கேள்விப்பட்ட பூங்காவனத்தின் மனம் பூகம்பம் ஆகிவிடுகிறது! இவன் மனமறிந்தும் இவனிடம் சொக்கி கிண்டல் பேசுகிருள்.

வேளியப்பனுக்கு மெடல் கிடைக்கச் செய்ததும், சினிமாவில் சேர 'சான்ஸ்' வாங்கித் தந்ததும் தன்னுலேதான் என்று 'பெருமை' பேசுகிருள்சொக்கி. பூங்காவனத்துக்கோ பொறுக்கவில்லே அவள் பேச்சு.

'எனக்கு என்ன வேறே வேலே இல்லேயா? யாரை யாரு கட்டிக்கிட்டா எனக்கு என்ன? எல்லாம் இந்தக் காலத்திலே குணத்தையா கவனிக்கிருங்க. பணத்தைத்தானே! நீ மட்டும் வேறே விதமாகவா இருக்கப்போறே...! என்றும் மனம் நொந்து பேசுகிருன்.

நாட்கள் ஓடுகின்றன. வேளியப்பன் தன் கடையை மூடிவிட்டு சினிமாவில் நடிக்கப் போய்விட்டதால், பூங்காவனத்தின் வியாபாரம் மீண்டும் 'களே' கட்டிவிடுகிறது!

ஒரு நாள், சொக்கியிடம் பூங்காவனம் அவள் திருமணத்தைப்பற்றிப் பேசுகிருன். சொக்கியோ, தான் வேளியை ஒருக்காலும், மனத்தால் கூட நினேத்துப் பார்க்கவில்லே யென்றும் தன் அப்பா தன்னே 'வேளி'யின் 'வேலி'க்குள் அடைத்துவிட முடிவு கட்டியதை அறிந்து, அதற்கு மருந்தாக, அவனேப்பாடச் சொல்லி, ஆடச் செய்து, சினிமா வரையில் துரத்திவிட்டது எல்லாம் உனக்காகத்தான் என்றும் பூங்காவனத்தினிடம்சொல்கிருள்.

அவள் போட்ட திட்டத்தையெல்லாம் உணர்ந்து கொண்ட பூங்காவனம் புளகாங்கிதம் கொள்கிருன்.

"சொக்கி! சொக்கி! அப்படின்னு உனக்கு என்னேக் கட்டிக்கொள்ளனும் என்கிற விருப்பம்..."

"எழுதி ஒட்டிக்கொள்ளவா நெற்றியிலே! பைத்யம்! பைத்யம்!! வியாபாரத்தைக் கவனி. பெத்தவங்க, பெரியவங்க வந்து 'மத்ததைக்' கவனிப்பாங்க! என்று சொல்லிக்கொண்டே சொக்கி சென்றுவிடுகிருள்!

இதுதான் கதை! இதிலே எத்துணேத் திருப்பங்கள் பார்த்தீர்களா? தான் காதலித்த சொக்கி தனக்குக் கிடைக்காமற் போவாளோ என்று ஏங்கும் பூங்காவனம் போலவே, வாசகர்களாகிய நம்மையும் பூங்காவனத்திற்காக ஆசிரியர் ஏங்க வைத்துவிட்டு, சொக்கியின் உள்மனதை வெளிப்படுத்தாமலேயே கதையைக் கொண்டு சென்று, எந்தவித எதிர்ப்புகளுக்கும் விரோதம் ஏற்படுத்திக்கொள்ளாமல், தன் காரியத்தையும் சாதித்துக்கொள்ளும் வகையில் அவளே கடைசியில் சொல்வதுபோல் ஒரே கல்லில் இரண்டு மாங்கா! பார்த்தியா சொக்கியோட வேலேயை— அருமையாகத் திட்டம் தீட்டி செயல்படும் சொக்கியை இவ்வளவு நாசுக்காக வேறு யாரால்தான் படம் பிடித்துக் காட்டமுடியும்!

காக்கையை ஏமாற்றி அதன் வாயிலிருந்த வடையைப் பறித்துக் கொண்டோடிடும் குள்ளநரியின் தந்திரத்திற்கொப்ப சொக்கியின் பாத்திரம் உருவாக்கப் பட்டிருக்கிறது.

தன் காதலே வெற்றிபெறச் செய்ய ஓர் ஆடவளுல் முடியாவிடினும், அதே சமயத்தில், பழம்போல் கனிந்த வெற்றியைப் பெற்றிட ஓர் இளம்பெண் மனம்வைத்தால் முடியும் என்பதை அண்ணு அவர்கள் இக்கதையின் வாயிலாகத் தெரிவிக்கிருர்.

கதையின் துவக்கத்தில் பழங்களின் பெயர்கள், தரம் அறிந்து என்னவிதமாக அலசுகிருர்! ஒரு பழக்கடைவைத்து வியாபாரம் செய்தவருக்கிருக்கும் அறிவு, இவருக்கும் இருக்கிறது என்பதை இக்கதை நமக்குச்சற்று அறிவிக்கிறது!

கதாபாத்திரங்களுக்கு அண்ணன் வைக்கும் பெயர்களே ஓர் அலாதி! அருமையான பெயர்களாக வைப்பார்! குறிப்பாக, கதைகளுக்கு அவர் கொடுக்கும் தலேப்புகள் என்றென்றும் நம் நெஞ்சை விட்டு அகலாதவையாகவே இருக்கும்!

'சொக்கி......!' — அருமையான, இனிப்பான, கேட்டவுடனே சொக்க வைக்கும் பெயர்! சிறு கதை உலகிலே, தன் எடுப்பான எழுத்தாலும், வளமான வசனத்தாலும், கற்பனேச் செறிந்த கதைக் கருவாலும், இளேஞர் முதல் முதியோர் முடிய அனேவரையுமே தன்பால் சொக்க வைத்துக்கொண்ட அண்ணுவின் ஆற்றலே ஆற்றல்!

செழுந்தமிழா! விழித்தெழடா!!

பண்டைப் புகழ்மயக் கந்தனில் வீழ்ந்து
கிடக்கும்செ ழுந்தமிழா!—நீ
இன்றையச் சூழ்நிலே கண்டுபு துப்புகழ்
கொள்ள விழித் தெழடா!!

திட்டமிட் டுத்துறை தோறும் புதுப்புது
சாதனே செய்திடடா!—நன்கு
எட்டுத் திசையி லும்ஈடிலா மாத்தமிழ்
கொட்டி முழக்கிடடா!!

விண்ணியல் யாவுமே நன்குதெ ளிவுற்று
முன்னவன் ஆகிடடா!—எங்கு
சென்றிடி னும்உயர் பைந்தமிழ் நாட்டரும்
பண்பிளுல் வென்றிடடா!!

வையத் தலேமையை ஏற்றுத் தமிழர
சாண்டிட வேண்டுமடா!—இதில்
ஐயமில் லேமுயன் ருயெனில் நாளேயே
நிச்சயம் ஆகுமடா!!

—முன்னேடி.

வினா-விடை

எல். மோகனதாஸ், மன்னார்குடி.

ஒரே கட்சியைச் சேர்ந்த இருவருக்கிடையே காழ்ப்புணர்ச்சி ஏற்பட்டுவிட்டால், விளைவு எப்படி இருக்கும்?

காழ்ப்புணர்ச்சிக்கு பண்பட்ட உள்ளம் இடந் தராது. எனினும் சந்தர்ப்பச் சூழல்கள், அப்படி ஒரு நிலையைத் தோற்றுவிக்குமானால், இருவரும் சாதாரண நிலையிலிருப்பவர்களானால் விளைவு ஒன்றும் விபரீதமாக இராது. யாரேனும் ஒருவர் சாமான்யராகவும், ஒருவர் பதவியிலிருப்பவராகவும் இருந்தால், சாமான்யர் அழுத்தப்பட்டுப் போவார். இருவருமே பதவியிலிருப்போரானால், காங்கிரஸ் கதைபோலாகி விடும்!

வே. சௌந்தரம். சேலம்.

பணத்துக்கு அடிமையாகாதவர்கள் பாரில் யாரேனும் உண்டா?

அப்படி உள்ளவர்கள் எவரேனும் இருப்பார்களானால் இந்தப் பாரகம் இப்படியா நிலைகுலைந்துவிட்டிருக்கும்?

கே. பழநிவேலன், பண்ருட்டி.

சிறந்த சிறுகதைகள் எப்படி இருக்கவேண்டும்?

கதையாகவும், கருத்துச் செறிவுள்ளதாகவும் இருக்கவேண்டும் படிப்போருக்குப் பொழுது போவதுடன், படிப்பினை தருவதாகவும் இருக்கவேண்டும்.

டி. ஜி. ராமச்சந்திரன் விழுப்புரம்.

முகையூர் இடைத்தேர்தலில் காமராசர் காங்கிரசை, சுப்பிரமணியம் ஆதரிக்கப்போவதாக அறிவித்திருக்கிறாரா என்ன?

அப்படியொன்றும் திட்டவட்டமாக அறிவித்துவிடவில்லை. தங்கள் தரப்பு, பிரசாரத்துக்குப் போகலாமா. கூடாதா என்ற யோசனையில் இருப்பதாகத்தான் அவர் அறிவித்திருக்கிறார். திருக்குறள் முனுசாமி அவர்களது வெற்றியை உறுதிப்படுத்த முடியாது. சுப்பிரமணியம் தரப்பு ஆதரவு கிடைக்குமானால், காமராசர் மேடையேறி வந்து. இத்தனை வாக்குகள் தனக்குக் கிடைத்திருக்கிறதே தெரியுமா என்று நெஞ்சு நிமிர்ந்து பேசுவார். அப்படி ஒரு ஏமாளியாக இந்திரா காங்கிரஸ் இருக்கும் என்று எதிர்ப்பார்க்கவேண்டியதில்லை.

புலவர் மணிமுடிச்சோழன், சென்னை.

காமராசருக்குப் பொருந்தும்படியாக திருக்குறளில் பாடல் ஏதேனுமிருக்கிறதா?

உலகத்துக்கே பொருந்தும்படியான குறளில், காமராசருக்கு மட்டும் இல்லாமலா போகும்! 'கனவினும் இன்னாது மன்னோ வினைவேறு சொல்வேறுபட்டார் தொடர்பு' என்ற குறட்பா, காமராசருக்காகவே பாடப்பட்டது போலிருக்கிறதே! கனவில்கூட அவர் தொடர்புகூடாது என்று கூறியிருப்பதைக் கவனியுங்கள்.

ஆர். மணவாளன், காஞ்சிபுரம்.

ஓவியங்கள் எப்படிப்பட்டனவாக இருக்கவேண்டும்?

நாட்டின் கலாச்சாரப் பண்பாட்டைச் சித்திரிக்கக்கூடியதாய், அல்லது பின்னணியாகக் கொண்டதுவாய் இல்லாவிட்டாலுங்கூட பரவாயில்லை— 'மாடர்ன் ஆர்ட்' என்று கூறப்படும் கிறுக்கல்களாக மட்டும் இருக்கக்கூடாது.

எம். கே. சுந்தரம், திருவாரூர்.

கம்யூனிஸ்டு கட்சி கூட, மாணவர் அமைப்புக்களின்மீது அக்கறை காட்டக் காரணமென்ன?

மாணவர் உலகம், கம்யூனிஸ்டுகளுக்கு மட்டும் விதிவிலக்கல்லவே. அத்துடன் கட்சிப் பணிக்காகவென்று வகுத்துத் தந்திருக்கின்ற நடைமுறைகளில், முக்கியமான பங்கு வகிப்பன கல்விக் கூடங்கள் என்று லெனினே கட்டுரையொன்றில் கோடிட்டு அல்ல, குறிப்பிட்டே வைத்திருக்கிறார் கல்விக் கூடங்களில், மாணவர்களுக்குப் போதிக்கும் பாடங்களுடன் கம்யூனிசச் சித்தாந்தத்தையும் பாடமாய் வைக்கவேண்டும் என்கிறார் லெனின். இந்த வகையில் முதியோரையும்விடக் கூடாது என்பது அவரது கண்டிப்பு— எப்படி ஐயா இளைஞர்களை விட்டுவைப்பார்கள்?

எஸ். கே. ராமன், வத்தலகுண்டு.

'அட்வொகேட்' என்பதற்கு, வழக்குரைஞர் என்பது சரியா, வழக்கறிஞர் என்பது சரியா?

'வழக்குரைஞர்' என்பது சரி என்பதுதான் நம் கருத்து.

தே. வெங்கடாசலம், காஞ்சிபுரம்.

உத்திரப் பிரதேச அரசின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

பிப்ரவரி இரண்டாவது வாரத்திற்குள் "முடிவு" ஏற்பட்டு விடும்!

★

2-ம் பக்கத் தொடர்ச்சி

திட்டப்படி ஒரு தொழிலாளியின் வருமானம் அவர் எவ்வளவு நெல் அறுவடை செய்கிறார் என்பதைப் பொறுத்திருக்கும். எனவே, அதிகக் கூலி பெறுவதற்காக அவர் அதிக அறுவடை செய்ய முயல்வார். இத்தகைய உபரி நன்கொடை தாளடிப் பயிர் உழவு வேலைக்குக் கிடைக்காது.

மூன்றாவதாக, நிலம் துண்டுபட்டுப் போவதால்—எல்லா வேலைகளையும் டிராக்டரை உபயோகித்தே செய்கிற வாய்ப்புக் குறைவு. எனவே டிராக்டர், தொழிலாளிகளை ஒரேயடியாய் வேலை இல்லாமல் செய்துவிட முடியாது.

முடிவாகச் சொல்வதானால் தஞ்சாவூர் அதி சமீப காலம் வரை பழங்கால விவசாய முறையைத்தான் மேற்கொண்டிருந்தது. நவீன வேலை முறைகளுக்கு மாறியதன் மூலம்தான் இந்த ஜில்லாவின் வளமான வயல்களில் பசுமைப் புரட்சித் தென்படுகிறது. சென்ற வருஷ நெல் உற்பத்தி 9 லட்சம் டன் அளவை எட்டியது. எனவே டிராக்டரை உபயோகிப்பதன் மூலம் இந்த மாவட்டத்தின் உற்பத்தி மேலும் பெருகும். விவசாயியின் வேலைத் திறமை அதிகரிக்கும். இதற்குள்ள எதிர்ப்பை இல்லாமல் ஆக்க வேண்டும்.

—நன்றி: 'திட்டம்'

குறையும்-நிறையும்

மதிப்பிற்குரிய ஆசிரியர் அவர்களுக்கு.

வணக்கம். 30–11–'69 'காஞ்சி' இதழில் குறையும்–நிறையும் பகுதியில் திருவாரூர் ராஜிமணாளன் அவர்களின் அஞ்சல், அரசின் தனி கவனத்திற்கு-குறிப்பிட்ட துறையின் நிருவாகச் செயற்பாட்டிற்கான வழிவகைக்கு—அனுப்பப்படுகின்றதாவென்பதறிய விழைகின்றேன்! அம்மடலில் அவர் கோடிட்டுக்காட்டும் குறைகள் பரவலாக எங்கும் இருந்து வருகின்றதென்பது மறுக்க முடியாத உண்மை. அரிசிபற்றி முந்தைய ஆட்சியினரின் ஏனோதானோவென்ற அக்கறையற்றப் போக்கு எதிர்பாராத விளைவை அவர்கட்கு ஏற்படுத்தியது என்பதையும் எண்ணத் திருத்தி, நிலைமைகள் சீராக்கப்படல் வேண்டும் என்பதில் தளரா முயற்சியும் குன்றா ஊக்கமும் நின்று நிலவி குறைகள் களையப்பட விழிப்பு மிகமிகத் தேவை! இதுபற்றி அரசு நடவடிக்கையும் அலுவலர்கள் போக்கும் பொதுமக்களின் மன நிறைவைப் பெற்றாக வேண்டும். எனவே தங்களின் குறையும் நிறையும் பகுதி மிகுதிக்கண் இடிப்பதோடமையாது, தகுதியான் தக்கவை செய்து சிறக்கவும் துணை நிற்பதாக!

இரா. வேங்கடம்,
ஊற்றங்கரை.

(தொடர்புடைய துறையினருக்கு அனுப்பப்படுவதில்லைஎன்பதை அறிவித்துக்கொள்கிறோம். —ஆசிரியர்)

* * *

ஐயா,

எங்கள் ஊரிலிருந்து இராஜபாளையம் செல்லும் சாலையில் நீண்டகாலமாக ஒரு பாலம் கட்டப்படாமல் இருந்து வருகிறது. இந்தப் பாலம் இல்லாததால் போக்குவரத்துக்கு மிகவும் இடையூறாக இருந்து வருகிறது. குறிப்பாக மழைக் காலங்களில் மிகவும் சிரமம். இராஜபாளையத்திலிருந்து எங்கள் ஊருக்கு வர வேண்டிய டவுன் பஸ் போக்குவரத்து இதனால் நிற்கிறது. 1967 பொதுத் தேர்தலில் கழகம் இந்தக் குறையை நிவர்த்திப்பதாகக் கூறி இந்தப் பகுதியில் ஓட்டுப் பெற்றது. எங்கள் ஊர் முன்னேற்றத்துக்கு உதவி செய்யும் இந்தப் பாலத்தை—எங்கள் ஊர் மக்களின் நீண்டநாள் கோரிக்கையான இந்தப்பாலம் கட்டும் வேலையைத் தமிழக அரசு உடனடியாக தலையிட்டு நிறைவேற்றித்தர வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கிறேன். அடுத்து வரும் தேர்தல்களில் ஓட்டுக்கு மக்களிடம் கழகத்தவர் போகவேண்டியிருக்கிறது என்ற நிலையை கருத்தில் கொண்டு உடனடியாக இது நிறைவேற்றப்படவேண்டும்.

எம். சி. ஜெயப்பிரகாசம்,
மம்சாபுரம்.

* * *

அன்புள்ள ஆசிரியர் அவர்களுக்கு,

நீலகிரி மாவட்டத்தில் சின்னஞ்சிறு நகரம் கோத்தகிரி. கோத்தகிரி நகரின், கடைத் தெருவில் கள்ளச் சாராயம் "பகிரங்க ரகசியமா"க விற்கப்படுகிறது. கோத்தகிரி நகரைச் சுற்றியுள்ள சிற்றூர்களில், மாலை வேளையில், அடிக்கடி சாராய வேட்டைக்குச் சென்று, குடித்து அப்பாவிகளைப் பிடித்து வருகின்ற கோத்தகிரி நகர போலீசுத்துறையினர். காவல் நிலையத்திற்கு ஒரு பர்லாங் தூரத்தில் கடைத் தெருவில் "பகிரங்க ரகசியமாக" சாராயம் விற்பவர்களைப் பிடிக்க முன் வருவதில்லை. குடிப்பவர்களைப் பிடிக்கும் போலீசு, விற்பவர்களைப் பிடிக்க அஞ்சுவது ஏனோ? பெருத்த பொருள் நட்டத்திற்கிடையிலும் ஏழை எளிய—பாமர மக்களின் வாழ்க்கை மேம்பாட்டினுக்காக—மது அரக்கனை ஒழித்திட வேண்டும் என்ற நல்லெண்ணத்தோடு—மது விலக்குக்கொள்கையில் உறுதியோடு இருக்கின்ற கலைஞரின் அரசுக்கு கோத்தகிரி காவல் நிலையத்தில்—குறிப்பாக காவலர்கள் செயல்நிச்சயமாக உறுதுணையாக அமைந்திடவில்லை என்பது பொதுமக்களின் கருத்து. எனினும், கோத்தகிரிக்கு இப்பொழுது புதிதாக வந்துள்ள காவல்துறை அதிகாரி, குறிப்பாக சாராயம் காய்ச்சுவோரைப்பிடித்து, சுறுசுறுப்பாக செயல்பட்டு வருகிறார் நேர்மைமிக்க—செயல்வேகத்தோடு இதே முறையில், இவர் இன்னும் ஓர் ஆண்டுக் காலம். இங்கு இருந்தால், கோத்தகிரி மக்களின் குறை நீங்கும் என்பது பொதுவானகருத்து காஞ்சி உதவுமா? அரசு கவனிக்குமா?

இ. நன்சன். பி. ஏ.,
கோத்தகிரி.

* * *

இந்தப் பகுதி, இனி கிழமை தோறும் தொடர்ந்து வெளிவரும். மிகுதிக்கண் இடித்தல் என்றகுறட்பா இயல்புப்படி இவற்றைப் பிரசுரிக்கிறோம். கடிதங்கள், சுருக்கமாக, தெளிவாக, காகிதத்தின் ஒரே பக்கத்தில் முழு முகவரியுடன் எழுதப்பட வேண்டும். கடிதங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:

"குறையும் நிறையும்" பகுதி
"காஞ்சி"
86, திருக்கச்சிநம்பித் தெரு,
காஞ்சிபுரம்-2.

பெருமைமிகு ஆசிரியர் அவர்கட்கு,

தமிழ், தமிழர் பெருமையைத் தரணிக்குத் தக்கவாறு எடுத்தியம்பி, வாழ்வையே நாட்டுக்கு அர்ப்பணித்த அறிஞர் அண்ணா அவர்களது உருவப்படங்கள், நினைவுப் பெயர்ப் பலகைகள் முதலியவற்றை அகற்றிடும் சிறுமைச் செயலில், நூலக ஆணைக் குழுவினர் ஈடுபட்டு வருவது வருந்தத்தக்கதாயிருக்கிறது. இதுபற்றி கழக அமைச்சர்களும், தலைவர்களும்அறிவார்களோ மாட்டார்களோ தெரியவில்லை. நாங்கள் அறிந்து அனலிட்ட மெழுகாய் மனம் பொங்கிக் கொண்டிருக்கிறோம். ஆத்திக்காடு தெக்கூர் என்பது கருமுத்து தியாகராசச் செட்டியார் வாழும் பேரூர். அவ்வூர் ஊராட்சிப் பணிமனை மன்றத்தில் அண்ணா நினைவுப் படிப்பகம் என, கட்டிடத்தின் ஒரு பகுதிக்குப் பெயரிட்டு, அன்றைய கல்வி அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் திறந்துவைத்தார்கள். அதனைத் திறந்துவைத்த அடுத்த வாரமே பெயர்ப்பலகை காணப்படவில்லை. விசாரிக்கும்போது, நூலக ஆணைக்குழு, அந்தக் கட்டிடத்திலிருப்பதால், அதன் யோசனையின் பேரில் பெயர்ப் பலகை அகற்றப்பட்டுவிட்டது என்று தெரிகிறது. அத்துடன், அப்பகுதியினைத் திறந்து வைத்ததற்காக, அங்குப் பணியாற்றிக்கொண்டு வந்த அப்பாவி நூலகர், நிரந்தரமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுவிட்டாராம். அறிவாலயத்தில் எங்கள் அண்ணனின் இலக்கியங்கள்கூட தக்கபடி இடம் பெறாதபோது, உருவப் படத்தை எதிர்பார்க்கக் கூடாதுதான்! என்ன செய்வது? அண்ணன் போதித்த கடமை, கண்ணியம், கட்டுப்பாடு எங்களுக்குத் துணை இருக்கிறதே!

ஒரு நூலகவாசகன்,
வஞ்சினிப்பட்டி.

*

மார்க்சிஸ்டுகளின் மங்கும் செல்வாக்கு

மூலம்: 'இந்து'வின் தஞ்சை நிருபர். தமிழில்: மலையமான்.

தஞ்சையில் குறுவை அறுவடை முடிவடைந்துவிட்டது. கடந்த இரண்டாண்டுகளாகக் கீழ்த் தஞ்சை மாவட்டத்தைப் பீடித்திருந்த அமைதியின்மை—கலவரம், ஏதுமில்லாமல் குறுவை அறுவடை முடிந்திருக்கிறது ஒரு குறிப்பிடத் தக்க அம்சமாகும்.

காங்கிரசின் ஆதரவாளர்களும் அனுதாபிகளும், திராவிடமுன்னேற்றக் கழக அரசு உழவுத்துறையின் இரட்டைப் பிணக்குகளை, பண்ணைக் கூலி, உள்ளூர்த் தொழிலாளரைப் பயன்படுத்தல் ஆகிய இவ்விரண்டில் ஏற்பட்ட பிணக்குகளைத் தீர்ப்பதில் வலிவான நடவடிக்கைகள் எடுத்துக்கொண்டதைப் பாராட்டுகிறார்கள். கழக அரசின் வலிவான நடவடிக்கைகளால் கீழ்த்தஞ்சைப் பகுதியில் இருந்துவந்த அமைதியின்மை தவிர்க்கப்பட்டது என்பதைக் காங்கிரசாரே ஒப்புகின்றனர். தமிழக முதல்வர் கலைஞர் கருணாநிதி, 'தமிழக அரசு தொழிலாளர் நலனுக்கு ஆதரவு தரத் தயங்காது; அதேபோலப் 'பயிர்ப் பாதுகாப்பு' அளிப்பதற்கும் பின் வாங்காது!" என்று வலங்கைமானில் அறிவித்தார்.

கணபதியாப் பிள்ளை அவர்களின் பரிந்துரைகளை வெளியிட்டுச் சட்டமியற்றி நடைமுறைப் படுத்தியது தான் கீழ்த்தஞ்சையின் அமைதிக்குக் காரணமென்றாலும், கடந்த சில ஆண்டுகளில் 'சிவப்புப் புரட்சி'யை ஆவேசத்துடன் தொடங்கிய இடதுசாரிக் கம்யூனிஸ்ட்டுகள். தங்களின் ஆழ்ந்த நம்பிக்கைக்குரியவர்களென நம்பியிருந்த தொழிலாளத் தோழர்களிடையே இப்போது மிகச் செல்வாக்குடன் இல்லை எனத் தோன்றுகிறது.

1200 கட்சி உறுப்பினர்கள் மீதும் 6300 'கிசான் சபா' உறுப்பினர்கள் மீதும் ஏறக்குறைய 16 200 உழவர்கள் மீதும் பிடிப்புக்' கொண்டிருந்த இடது கம்யூனிஸ்ட்டுகளின் செல்வாக்கு குறைவுக்குப் பல காரணங்கள் கொடுக்கப்படுகின்றன.

முதலில், கணபதியாப்பிள்ளை அவர்களின் பரிந்துரைகளுக்கிணங்க செய்யப்பட்டுள்ள கூலி நிர்ணயம் உழவர்களை அனுமதிப் படுத்திவிட்டது பிறகு நாகப்பட்டணத்திலும் நன்னிலத்திலும் மார்க்ஸிஸ்டுகளின் டிராக்டர் எதிர்ப்புப் போராட்டத்தினைக் குறித்துத் தமிழக அரசு எடுத்துக்கொண்ட நடவடிக்கைகளும் தொழிலாளர்களின ஒத்துழைப்புக் குறைவும் காரணமாக வருகின்றன.

வலிவலத்திலும் நமசிவாயபுரத்திலும் விசாரித்ததில் டிராக்டர் எதிர்ப்புப் போராட்டத்தில் இடது கம்யூனிஸ்டின் உச்சகட்டத் தலைவர்கள் பங்கெடுத்துக் கொள்ளவில்லை என்பது தெரியவருகிறது. டிராக்டர் எதிர்ப்புக் கிளர்ச்சி தொடர்பாகக் கைது செய்யப்பட்ட தொழிலாளர்களில் ஒருவர், தாங்கள் சிறையில் இருந்தபோது தங்கள் குடும்பத்தைக் காக்க யாரும் முன் வரவில்லை என்று குறிப்பிட்டார். பல இடங்களில் விருப்பமற்ற தொழிலாளர்கள் கிளர்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ள வேண்டுமென்று கட்டாயப்படுத்தப் பட்டதாகவும் அவர் குறிப்பிட்டார். கிளர்ச்சியின் பயன் தொழிலாளர்க்கு அல்ல என்பதும் அவர் கருத்து.

உழவுத் தொழிலாளரின் ஒத்துழைப்புக் குறைவு காரணமாக இந்த மாவட்டத்தில் மார்க்ஸிஸ்ட்டுகள் புதுப் போராட்டம் எதனையும் தொடங்க இயலவில்லை. ஆனால் புது உறுப்பினர்களைச் சேர்ப்பதற்காக அவர்கள் 'பாதயாத்திரையை' மேற்கொண்டுள்ளனர்.

3,375 கட்சி உறுப்பினர்களையும் 8,500 'கிசான் சபா' உறுப்பினர்களையும் கொண்ட வலது கம்யூனிஸ்ட்டுகள், மார்க்ஸிஸ்டுகளை விட்டுத் தங்களிடம் ஏராளமானவர்கள் வந்து சேர்வதாகக் கூறுகின்றனர். வலதுசாரிகளின் 19,700 உழவுத் தொழிலாளர்கள்—உழவர்கள் டிராக்டர் எதிர்ப்புக் கிளர்ச்சியில் பங்கெடுத்துக்கொள்ளவில்லை. கணபதியாப் பிள்ளையின் பரிந்துரைகளுக்குக் கட்டுப்படும் நிலமுடையோரிடம் ஒத்துப்போவதென்பதே, இவ்வாண்டில் வலதுசாரிகளின் மனப்போக்காகக் காணப்பட்டது. கூலி நிர்ணயத்தை நடைமுறைப் படுத்தவேண்டி ஏற்பட்ட கிளர்ச்சியில் சிறைப்படுத்தப்பட்டவர்களின் குடும்பத்தைக் காக்க எடுத்துக் கொண்ட கவனம், வலதுசாரிகளின் கட்சி உறுப்பினர் பெருக வழி வகுத்தது.

நிலமுடையவர்களும் இடதுசாரிகளின் செல்வாக்குக் குறைவுக்குச் சமமான காரணமாவார்கள். நிலமுடையவர்கள் தொழிலாளர்களின் தேவைக்கு ஏற்ப பாதுகாப்பு அளிப்பதன் மூலம் அவர்களைத் தங்கள் பக்கத்துக்கு வென்றிழுத்துக் கொண்டனர்.

இது தவிர திராவிடர் கழக—திராவிட முன்னேற்றக் கழகத் தொழிலாளர்களின் நலன்களின் பாதுகாப்புக்கென வந்த இச்சங்கங்களின் தோற்றமும், இடதுசாரிகளின் சரிவுக்குக் காரணமாயிற்று.

கம்யூனிஸ்டுகளில் மூன்றாவது சக்தியான நக்ஸல்பாரிகள்—மார்க்ஸிஸ்டுகளிடமிருந்து பிரிந்தவர்கள்—இப்போது மௌனமாயிருக்கிறார்கள். இந்தத் தீவிர வாதிகள் கூட்டம்—தலைஞாயிறு பகுதியில் வலிவுபெற்ற கூட்டம்—கிசான் அமைப்புகளோ அல்லது கிசான் சங்கங்களோ பெற்றதில்லை. இதன் நடவடிக்கைகளும் மங்கிவிட்டன.

நாகப்பட்டினம் இடது கம்யூனிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர் தோழர். கே. ஆர். ஞானசம்பந்தன் தங்கள்கட்சியிலிருந்து 'கட்சிமாறல்கள்' எதுவும் இல்லை என்று மறுத்தார். ஆனால் குடியாத்தம் தொகுதி இடது கம்யூனிஸ்ட் சட்டமன்ற உறுப்பினர் தோழர் வி. கே. கோதண்டம், அண்மையில் தஞ்சையைச் சுற்றி உழவர் ஒரு சில—அல்லது ஒன்றிரண்டு தொழிலாளர்கள் அவ்விதம் தங்கள் கட்சியிலிருந்து விலகி இருக்கலாம் என்றும் ஆனால் சொந்த நலன்கள் தேடும் சக்திகள்' எங்கள் கட்சிக்கு சிறுமை கொண்டு வரவும் இதன் செல்வாக்கைக் குறைக்கவும் பெரும் பங்கெடுத்துச் செயல்படுகின்றன என்றும் கூறினர்.

★

கேட்டீரா சேதி!

தானுகவே நடக்குமா?

மத்திய அரசிடம் குவிக்கப்பட்டுள்ள அதிகாரங்களை மாநிலங்களுக்குப் பிரித்துக்கொடுத்து, அதிகாரங்களைப் பரவலாக்கவேண்டும் என்ற கழகத்தின் நீண்டநாள் வேட்கையை யொட்டி, தமிழக அரசு அண்மையில் நியமித்த மூவர்குழு, தன் பணியினை முதன் முதலாகத் தொடங்கி இருக்கிறது. தமிழக அரசுக்கு ஆலோசனைகளையும், அதிகாரப்பங்கீடுகள் பற்றிய விவரங்களையும் இக்குழு தெரிவிக்கும். இதன்படி, முன்னுள் தலைமை நீதிபதி திரு. பி. வி ராசமன்னுர் அவர்கள் தலைமையில், மற்ற குழு உறுப்பினர்களான டாக்டர். ஏ. இலட்சுமணசாமி முதலியாரும், திரு. ஆர். சந்திரா ரெட்டியும் கூடி, இது தொடர்பாக விவாதித்து முதலில் மத்திய—மாநில உறவுநிலை குறித்து, பலதரப்பட்ட பிரிவினரிடமிருந்தும் கருத்தறியும் முயற்சியாக வினுத்தாள் ஒன்று விடுப்பது என்றும் முடிவெடுக்கப்பட்டுள்ளது. குழுவின் பணி முடிவுற்று, அறிக்கை தரப்படும்போது, மத்திய அரசே, தானுக முன் வந்து அதிகாரங்களைப்பகிர்ந்து கொடுத்துவிடும் நிலையை அடைந்துவிடும் என்று எதிர்பார்க்கலாமா?

அவர்கள் எதிர்ப்பார்களே!

சோஷலிசம் என்ற சொல்லினை உச்சரித்துப் பார்க்கும்போது எவ்வளவோ இன்பமாகத்தானிருக்கிறது. அந்த இலட்சியத்தினை எய்ய எடுக்கும் முயற்சிகளிலீடுபடும்போது, எவ்வளவோகொடுமைகளையெல்லாம் சந்திக்கவேண்டி ஏற்பட்டுவிடுகிறது என்பதற்காக, இலட்சியத்திலிருந்து யாரும் பின்வாங்கிவிடுவதில்லை. ஒன்றை அரசுடைமையாக்கி விடுவதனுலேயே, சோஷலிசச் சித்தாந்தம் கைகூடி வந்து விடுவதில்லை, தனியார் துறையில் ஒன்று இருப்பதனுலேயே சோசலிசக் கொள்கை மறுக்கப்பட்டும் விடுவதில்லை. சில தொழில்களை அரசே நேர்ப்பட நிருவகிக்கிறது. சிலவற்றை தனியார்மூலம் நிருவகிக்கச் செய்யப்படுகிறது, "எல்லாவற்றையும் நாட்டுடைமையாக்குவது" என்பது சிலபோதில்இயலாததாக அல்லது விரும்பத்தக்கவிளைவுகளைத் தராததாக இருக்கக்கூடும். எனவேதான் சென்ற கிழமை தமிழக அமைச்சர் மாண்புமிகு மாதவன் அவர்கள் "தி. மு. க. வின் தொழிற்கொள்கை, எல்லாவற்றையும் நாட்டுடைமையாக்குவதென்பது அல்ல; தனியார் துறையும் வளர்ந்தோங்கச் செய்யவேண்டும் என்பது தான்" என்று கூறி இருக்கிருர். ஒரு நாடு ஜனநாயக வழியில் நடையிடுகிறது என்று கூறும்போதே, உலகத்தில் உள்ள அனைத்து நடைமுறைகளுக்கும் அது ஒப்பமளித்துவிட்டது என்பதுதான் பொருளாகும் இந்த வழியில் அமைச்சர் மாதவன் அவர்களது கருத்து தமிழகத் தொழிலதிபர்களை மன நிறைவு கொள்ளச் செய்யும். இதனடிப்படையில் அரசு, எடுக்கும் முயற்சிகள் காரணமாக புதிய சில தொழில்கள் தோற்றுவிக்கப்படவும், பல ஆயிரக் கணக்கானேருக்கு வாழ்வு கிடைக்கவும் வழியுண்டு. ஆனுல் கம்யூனிஸ்டுகள் மட்டும் இதனை ஏற்கமாட்டார்கள். தனியார்துறை என்கிறபோது "ஏகபோக முதலாளித்துவம்" உருவாகிவிடும் என்பார்கள், 'இது தொழில் துறைக்குக் கேடு' என்றும் கூறுவார்கள். இந்திய நாட்டின், சிறப்பாகத் தமிழகத்தின் சமுதாய அமைப்புப்பற்றியும் அவர்கள் கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால், அதற்கென ஒரு போராட்டத்துக்குத் தம்மை ஆளாக்கிக்கொள்ள மாட்டார்கள். எப்படியாவது தொழில் வளம் பெருகவேண்டும் மக்கள் வாழ்வு வளம் பெற்றவர்களாக இருக்கவேண்டும். எண்ண வளம் மிக்கவர்களாக ஆக்கப்படவேண்டும்! இந்த வகையில் முயற்சி வளம் இருக்கவேண்டும் என்பதே நமது வேட்கை வளம்!

தனித்தியங்க விடுங்கள்!

உலகத்தின் பல பாகங்களிலும் 'மாணவர் பிரச்னைகள்' என்று சில விவகாரங்கள் இருக்கத்தான் செய்கின்றன. வளர்ந்து வரும் பிரச்னைகளின் பெருக்கத்தாலும், அறிவின் முதிர்ச்சி காரணமாகவும் இந்த விவகாரங்கள் உயிருட்டம் பெறுகின்றன என்றே மதிக்கப்படுகிறது. ஆனுல் நம் நாட்டைப் பொறுத்தமட்டில், மாணவர் பிரச்னைகள் என்பன, மாணவர்களின் பேரால், அரசியல் பிரச்னைகளாகவே இருப்பதனைப் பல கோணத்திலிருந்தும் கண்டுரைக்க முடியும். சில அரசியல் கட்சிகள், தங்கள் அரசியல் நடைமுறைகளுக்காக மாணவர்களைப்பங்கு போட்டுக்கொண்டு, அவர்களது ஆற்றலினைத் திசை திருப்பிவிடும் தீய முறை நம நாட்டில நாளுக்கு நாள் மிருந்து வருவதை எடுததுககாட்டுவதுதான் தமிழநாடு முதலமைசசா, இதுதொடர்பாக அண்மையில் எடுத்துக்காட்டி இருக்கும் கருத்தாகும். அரசியல் கட்சிகள் அனைத்துமாக, மாணவர்களின் ஆற்றலை, அவர்கள் வாழ்வுக்கு மட்டுமேபயன்படுத்தும் நடைமுறையில, ஈடுபடவில்லையானுல் வருங்காலம், வருந்தத்தக்கதாக இருப்பதினின்றும் தடுக்க முடியாமலே போய்விடக்கூடும். இவற்றை உறுதி செய்வனவாகத் தெரிவதே, அங்கு மிங்குமான தோற்றுவிக்கப்பட்டுள்ள சில பிரச்னைகள். அரசியல் வாதிகள் அந்த உலகத்தைத் தனித்தியங்கவிடப் போகிருர்களோ, இல்லையோ

ஆசிரியர், வெளியிடுபவர் சி.என்.ஏ. இளங்கோவன் அவர்களால், காஞ்சிபுரம்
96 திருக்கச்சிநம்பி தெரு, அல்லி அச்சகத்தில், அச்சிட்டு வெளியிடப்படுகிறது.